பக்கங்கள்: பத்து
Registered as a Newspaper

பொது சன நூலகம்
3 - MAR 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 18 திங்கட்கிழமை (02-03-1998) UTHAYAN- A Lively National Tamil Daily கதிர்: 81

# மாங்குளம் பகுதியில் கடும் ஷெல் தாக்குதல்!

## எனினும் நேற்று மோதல் இல்லை

வவுனியா, மார்ச் 2

மாங்குளம் நகரைக் கைப்பற்றும் நோக்குடன் முன்னேற முயலும் "வெற்றி உறுதி" துருப்புக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு முதல் கடுமையான ஷெல் தாக்குதல்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரு பகுதிக்கும் இடையில் அகோரமாக மாறி மாறி ஷெல் தாக்குதல் தொடர்வதாகவும்— சேத விவரங்கள் குறித்து தகவல் கிடைக்கவில்லை என்றும் — வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

ஷெல் தாக்குதல்கள் நேற்று கடுமையாக இருந்தபோதிலும் இரு தரப்பினருக்கும் இடையில் குறிப்பிடத்தக்க அளவு மோதல் சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் படையினர் மாங்குளம் நகரைச்சுற்றி வளைத்துள்ளனர் எனவும்—

விடுதலைப் புலிகள் எவ்வளவு எதிர்ப்புக் காட்டினாலும் அடுத்த சில நாள்களுக்குள் நகரம் கைப்பற்றப்பட்டுவிடும் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் மாங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காடுகளை அழிக்கும் வெற்றி உறுதி படையினர்

யாழ்ப்பாணம், மார்ச் 2

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் கைப்பற்றியுள்ள சண்டி வீதியின் இருமருங்கிலும் கணிசமான அளவு பகுதிகளை வெட்டவெளியாக்கியுள்ளனர்.

வீதியில் இருந்து இருமருங்கிலும் 500 யார் தூரத்தில் உள்ள மரங்கள் யாவும் வெட்டப்பட்டுள்ளன.

வீதியோர வீடுகளும் அழிக்கப்பட்டுள்ளன. (இ-3)

## யாழ். புதிய மேயர் பதவி ஏற்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ். மாநகர சபையின் புதிய நிர்வாகம் பதவியேற்கும் நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் புதிய மேயராக சறோஜினி தேவி யோகேஸ்வரன் எதிர்வரும் 4 ஆம் திகதி சுபநேரத்தில் பதவியேற்க ஏற்பாடாகியிருந்தது.

சில காரணங்களுக்காக இந்த நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாநகர சபைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தெரிவான ஒன்பது உறுப்பினர்களில் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ள மூன்று உறுப்பினர்களின் இடத்துக்கு புதியவர்கள் நியமனம் செய்யப்படுவதற்காகவே இந்த பதவியேற்பு பிற்போடப்பட்டுள்ளதாக ஒரு தகவல் தெரிவித்தது. (இ-3)

## புளொட்டின் 4 சபைகளும் 6 ஆம் திகதி பதவி ஏற்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

பருத்தித்துறை, சாவகச்சேரி நகர சபைகள், பச்சிலைப்பள்ளி, பருத்தித்துறை பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கு தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி பதவியேற்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஜனவரி 29 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் மேற்படி நான்கு சபைகளையும் புளொட் அமைப்பு கைப்பற்றியிருந்தது.

பருத்தித்துறைநகரசபைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பரபரப்பை ஏற்படுத்திய மர்ம பெண்

கொழும்பு, மார்ச் 2

கொழும்பில் நடமாடும் மர்மப் பெண் ஒருவர் குறித்து மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகர மண்டபத்துக்கு அருகே நின்ற வான் ஒன்றில் ஏறிய இந்தப் பெண் தன்னிடம் குண்டு ஒன்று இருப்பதாகவும்—

தன்னை தெகிவளையில் விடுமாறும்—

இல்லையேல் குண்டை வெடிக்க வைத்துவிடுவேன் என்றும் வான் சாரதியை மிரட்டியுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## துரையப்பா ஸ்ரேடியம் இன்று திறப்புவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

கடந்தகால நடவடிக்கையால் சேதமடைந்திருந்த இந்த விளையாட்டரங்கு புனரமைக்கப்பட்டு திறக்கப்படுகிறது.

யாழ். படை வட்டாரங்கள் இது தொடர்பாக வெளியிட்ட செய்திக் குறிப்பில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மூழ்கிய கப்பலில் இருந்த டாங்கிகள் இரண்டும் மீட்பு!

கொழும்பு, மார்ச். 2

விடுதலைப் புலிகளின் தாக்குதலால் மூழ்கடிக்கப்பட்ட பவ்வத்த கப்பலில் இருந்த இரு டாங்கிகளும் மீட்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பவ்வத்த கப்பலை கடலுக்கு அடியில் வைத்தே தகர்த்து விட படையினர் திட்டமிடுவதாக முதலில் செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே.

மூழ்கிய அந்த கப்பலில் இருந்த டாங்கிகள் தற்பொழுது வெளியே எடுக்கப்பட்டதுடன் இந்திய கடற்படையின் உதவியுடன் அந்த கப்பலை வெளியே எடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## புளொட் உறுப்பினர் காயம்

மட்டக்களப்பு, மார்ச் 2

மட்டக்களப்பு வலையிறவு —வவுணதீவு பாலம் சென்ரி அருகில் நேற்று முன்தினம் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் புளொட் உறுப்பினரான ரவி என்பவர் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-21)

## பருத்தித்துறை தாக்குதல் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 2

பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த 22 ஆம் திகதி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் குறித்து விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள குழு தனது விசாரணையை காங்கேசன்துறை கடற் படைத்தளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்தது.

கடற்படையினரின் மேற்குப் பிராந்திய தளபதி ரியர் அட்மிரல் தயா சந்தகிரி தலைமையிலான குழு இந்த விசாரணையை ஆரம்பித்துள்ளது என்றும்—

கப்பல்கள்தாக்கப்பட்டபின்னணி, பாதுகாப்பு பலவீனம் ஆகியன தொடர்பாக இக்குழு ஆராயத் தொடங்கியுள்ளது என்றும் — கொழும்பு செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (இ-3)

# வடக்கு -- கிழக்கு யுத்தம் வருட இறுதிக்குள் முடியும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

'வடக்கு—கிழக்கு யுத்தம் இவ்வருட இறுதிக்குள் முடிந்து விடும்' என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

பொலநறுவையில் ஜனாதிபதி பொதுமக்கள் சேவை இயக்கத்தின் நிறைவுவிழா நேற்று மாலை நடந்தபோது அதில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படி நம்பிக்கை வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து 80 சத வீதமான பிரதேசங்கள் மீட்கப்பட்டுவிட்டன. எஞ்சிய பிரதேசமும் இவ்வருட இறுதிக்குள் கைப்பற்றப்பட்டுவிடும்.

வருட இறுதியுடன் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதுடன் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த அதிகாரப்பரவலாக்கல் அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஓகஸ்டில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்—என்றார் ஜனாதிபதி (இ-3-9)

# மன்னாரிலிருந்து குறிகாட்டுவானுக்கு படகுச் சேவை நடத்துவதற்கு முயற்சி

## யாழ். வர வழியின்றி 7 ஆயிரம் பேர் தவிப்பு

வவுனியா, மார்ச் 2

மன்னாரில் தங்கியுள்ள 7 ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வசதியாக மன்னாருக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் படகுச் சேவை ஒன்றை நடத்த அனுமதி தருமாறு மன்னார் செயலகம் அத்தியாவசிய சேவைகள் நாயகத்தைக் கேட்டுள்ளது.

மன்னாரில் இருந்து கற்பிட்டிக்கு சேவையில் ஈடுபட்டுள்ள ''றமோன'' என்ற பெயரையுடைய இரு படகுகள் மன்னாரில் தற்சமயம் உள்ளதாகவும் —

அந்த படகுகள் மூலம் தினமும் 300 பயணிகளை மன்னாரில் இருந்து குறிகாட்டுவான் துறைக்கு ஏற்றிச்செல்ல முடியும் என்றும் — மன்னார் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தப் படகுகள் நான்கு மணி நேரத்தில் மன்னாரில் இருந்து குறிகட்டுவானுக்கு செல்லக் கூடியவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-9-164)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SIYANA'S

மீண்டும் யாழ். நகரில்!

★ அலுமினிய பைப்புகள் (பார்) ★ சோக்கேஸ்,
★ கடை பிற்றிங்குகள் செய்வதற்குரிய அலுமினிய பீடிங்குகள் ★ கண்ணாடிகள் ★ ரிவேட்,
★ பிளைவூட் ★ அன்ரனா பைப்புகள்
★ போமிக்கா சீட் மற்றும்
★ எலெக்ரிக் ரில் மெசின்

மேலும் இது சம்பந்தமான சகல விதமான பொருள்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

## சியானாஸ்

இல. 77, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்) (53656)



## வைத்தியசாலை

ஆங்கில, ஆயுர்வேத மற்றும் சீன அக்கு பஞ்சர் சிகிச்சை சிறப்பாக வழங்கப்படும். சகல நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். மேலும் மூட்டுவாதம், பாரிசவாதம், இளம்பிள்ளைவாதம் ஆகியவற்றுக்கு சிறப்புச் சிகிச்சையும், இளநரை, மயிர் உதிர்தல், பொடுகு ஆகியவற்றுக்கு கூந்தல் தைலமும் வழங்கப்படும்.

Dr. க. குலேந்திரன்,
அலுக்கை,
அளவெட்டி. (49977)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா செல்வநாயகம்

[மின்கம்பி இடுபவர் – சகா, உரும்பராய்]

புதுறோட், ஆறுகால்மடத்தைச் சேர்ந்த கந்தையா செல்வநாயகம் 01-03-1998 அன்று காலமாகிவிட்டார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிறீரஞ்சினி, சிறீமனோகரி, சிறீஜெயந்தினி, சிறீதர்சினி, செல்வரஞ்சன், மோகன்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீவிக்னேஸ்வரன், மதியாகன் ஆகியோரின் மாமனாரும், நிரேஸ், நிதுசன், திவ்வியா, திற்சன், திகஸ்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (2-3-98) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
விக்னேஸ்வரன்
(மருமகன்)

புது றோட்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
[சி/3009]

## கந்தர் கதிராமு (சாமியார்)

(ஆலய தொண்டர்)

ஆனைக்கோட்டை புளியங்கண்டு பிள்ளையார் கோயிலடி ஒழுங்கையைச் சேர்ந்த கந்தர் கதிராமு 01 – 03 – 1998 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தர் வள்ளியம்மையின் அன்பு மகனும், தங்கம்மா, மகேஸ்வரி காலஞ்சென்றவர்களான ராமு, முருகேசு ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 01 - 03 – 1998 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், தொண்டர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
பூ. தங்கம்மா
(சகோதரி)

புளியங்கண்டு,
பிள்ளையார் கோயிலடி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
(53759)

## கந்தையா தங்கச்சியம்மா

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த க. தங்கச்சியம்மா அவர்கள் 1 - 3 – 98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சி. கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருளேஸ்வரி, வினாயகலிங்கம் (கனடா), தர்மலிங்கம் (கொழும்பு), இராசேஸ்வரி, சம்புலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பொன்னுத்ரை (இளைப்பாறிய ஆசிரியர்) சாரதாதேவி, பாலகௌரி, சுப்பிரமணியம் (முன்னாள் மின்சார சபை சாரதி), யோகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 2-3-98 இன்று பி.ப. 4 மணியளவில் சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. சித்திரரஞ்சன்
(பேரன்)
(53762)

## கல்முனை நோக்கி ஷெல்!

அரியாலை, மார்ச் 2

பலாலி இராணுவ முகாம் பகுதியில் இருந்து பூநகரி, கல்முனைப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் சனி இரவு ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஷெல்கள் கல்முனை மற்றும் கல்லடி கடற்பகுதியில் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ–17)

## நிலையம் இயங்குகிறது

கொழும்புத்துறை, மார்ச் 2

தொல்புரம் மத்திய சன சமூகநிலையம் அண்மையில் புனரமைக்கப்பட்டு புதிய ஆட்சிக்குழு தெரிவு செய்யப்பட்டு தலைவர் சி. சிவப்பிரகாசம் தலைமையில் தற்போது இயங்கி வருகிறது. (ஐ-30)


சுதுமலைச் சந்தி
மானிப்பாய் வீதியில்

### காமாக்ஷி

வெண் திரையில்

நெப்போலியன் நடித்த
பகவத்சிங் (CD)

காட்சி தினமும்: 2-30
(53761)



எமது புதிய
வெளியீடு!

விக்னேஷ் – நாசர்
நடித்த

### வேலை

ஒறிஜினல்
வெளியீடுகள்!

★ திருமதி பழனிச்சாமி
★ ஒரு தொட்டில் சபதம்
★ ஆதித்தியன்
★ முடி சூடா மன்னன்
கவுண்டமணி – செந்தில்
★ நகைச்சுவை

வீடியோ
CD வெளியீடு!

★ சொர்ணமுகி
★ பேய்

3 மணித்தியால வீடியோ ரேப் ஸ்லூல் விற்பனைக்கு உண்டு.

### வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.
(சி/3010)



### S.R. சினிமா

வெண் திரையில்
கரவெட்டி

அம்பம் வைத்தியசாலைக்கு
அண்மையில்.

பார்த்தீபன்
தேவயானி
நடித்த

### சொர்ணமுகி

காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2959)



நெல்லியடி

### மஹாத்மா

வெண் திரையில்

முரளி — சுபலட்சுமி
நடித்த

தினந்தோறும்
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2956)


# மெய்வல்லுநர் போட்டிகள்

குருநகர், மார்ச் 2

யாழ். சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் புதன் கிழமை மு.ப. 9.30 மணிக்கு யாழ். சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் அருட் சகோதரி மேரி யுவேமியா தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் பிரதம விருந்தினராகவும், குருநகர் பங்குத் தந்தை அருட்திரு. பி. பொனிபாஸ் அடிகளார், யாழ். கல்வி வலயம்–1 உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ள உள்ளனர். (ஐ-51)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி பி. எவ். சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலயம்-1இன் உதவிக்கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) த. அருணகிரிராஜா பிரதம விருந்தினராகவும், அருட் தந்தை சி. ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராகவும், சேவைக்கால உடற்கல்வி ஆசிரியர் த. குமாரசாமி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ஐ-8)

★ ★ ★

வலிகாமம், மார்ச் 2

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் க. செல்வகுமாரன் தலைமையில் நடைபெறும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-135)

★ ★ ★

தென்மராட்சி, மார்ச் 2

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் சி. கே. துரைரத்தினம் தலைமையில் நடைபெற்றன.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. கைலைநாதனும், சிறப்பு விருந்தினர்களாக கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசன், உதவிக் கல்விப் பணிப்பாளர், நா சத்தியநாதன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக டாக்டர் பே. பிலிப்ஸ் அதிபர் சி. நாகராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

போட்டியில் நீல இல்லம் முதலிடத்தைப் பெற்றது. (ஐ-117)

## சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 2

நல்லூர் ஆடியபாதம் வீதியில் உள்ள ஸ்ரீவாலையம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கள் காலைஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் மாலை 4 மணிக்கு அம்பாள் உள்வீதி வலம் வருவார். எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தமும் காலை 9மணியளவில் நடைபெறும். (ஐ)

★ ★ ★

கொக்குவில் தலையாழி ஞானவைரவர் ஆலயத்தில் இன்று திங்கள் பிற்பகல் 3.00 மணிக்கு விநாயகர் அபிஷேகம் நடைபெற்று சுவாமி வீதி வலம் வருவார்.

நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பரணியை ஒட்டி ஞானவைரவப் பெருமானுக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று வீதியுலா நடைபெறும். (ஐ)

★ ★ ★

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மாசி மக இலட்சார்ச்சனை இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 11ஆம் திகதி வரை நடைபெறும். 10ஆவது நாளான மாசி மகத்தன்று காலை சங்காபிஷேகமும், மாலையில் உற்சவமும் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

கோண்டாவில் ஸ்ரீ ஞான வைரவர் கோயில் மகா கும்பாபிஷேகம் கடந்த மாதம் 9 ஆம் திகதி நடைபெற்றது. அதன் தொடராக நடைபெற்று வந்த மண்டலாபிஷேகப் பூர்த்தி நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் முதல் இடம்பெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

பருத்தித்துறை தம்பசிட்டி அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் (பண்டாரி அம்மன் ஆலயம்) ஆலய வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும். (ஐ–173–30)

## வீதி திருத்தம்

சாவகச்சேரி நகரப்பகுதியில் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்திருந்த கச்சாய்வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் திருத்தப்படவுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி
சுருக்கெழுத்துக்கழக ஸ்தாபகரும், செயலாளருமான
திரு. க. வ. சிவச்சந்திரதேவன்
(சுருக்கெழுத்தாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை)
அவர்களின் அன்புத் தந்தையாரான
பண்டிதர், சைவப் புலவர், வித்துவான்,
இளைப்பாறிய ஆசிரியர்

### கு.க. வையிரவிப்பிள்ளை

(வைரவனார்)

அவர்கள் 28-02-98 அன்று இறைபதமெய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்,
தலைவர், நிர்வாகக் குழுவினர்கள்,
போதனாசிரியர்கள், மாணவர்கள்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்,
வதிரி, கரவெட்டி.
(53764)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியப்பொதுத்தேர்தல்

# இன்று பிற்பகல் முதல் முடிவு வெளியாகும்!

புதுடில்லி, மார்ச் 2

**இந்தியாவில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின் வாக்குகளை எண்ணும் பணி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இன்று காலை 8 மணி முதல் ஆரம்பமாகிறது. முடிவுகள் இன்று பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

மொத்தமாக உள்ள 543 மக்களவைத் தொகுதிகளில் 533 தொகுதிகளில் வாக்களிப்பு மூன்று கட்டங்களாக நடந்து முடிந்துள்ளன. நாடு முழுவதும் 870 இடங்களில் ஆயிரத்து 400 நிலையங்களில் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வாக்கு எண்ணும் பணி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சிறிய தொகுதிகளின் முடிவுகள் இன்று முற்பகலிலேயே தெரியவந்து விடும் என்றும் எனினும் முதலாவது முடிவு பிற்பகல் 2 மணியளவில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்திய வானொலி அறிவித்தது.

இதேவேளை — திரிபுரா, குஜராத், இமாச்சல் பிரதேஷ், நாகர்லாந்து ஆகியமாநிலங்களில்நடைபெற்றசட்டப் பேரவைத் தேர்தல் வாக்குகளும் இன்று எண்ணப்படுகின்றன அவற்றின் முடிவுகளும் இன்று முதல் வெளியாகும்.

மொத்தம் 4 ஆயிரத்து 600 வேட்பாளர்களின் அரசியல் எதிர்காலத்தை இந்த தேர்தல் முடிவுகள் நிர்ணயிக்கும். பிரதமர் ஐ. கே. குஜரால், அடல்பிஹாரி வாஜ்பாய், எச். டி. தேவகௌடா, சந்திரசேகர், எல். கே. அத்வானி, லாலுபிரசாத்யாதவ், கான்ஷிராம், இந்திரஜித் குப்தா, ராம்விலாஸ் பஸ்வான், ப. சிதம்பரம் ஆகியோரும் இவர்களில் அடங்குவர். (ஐ)

## தேர்தல் முடிவு 'இன்ரநெற்'றிலும்

புதுடில்லி, மார்ச் 2

இந்திய பொதுத் தேர்தல் முடிவுகள் இம்முறை இன்ரர்நெற்றிலும் வெளியிடப்படவுள்ளன. இதற்கென ஏற்கனவே 6 ஆயிரம் பக்கங்கள் 'வெப்சைட்டிற்கு' வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் எம். எஸ். கில் தெரிவித்தார்.

இதேவேளை தேர்தல் முடிவுகள் 24 மணிநேரமும் இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமும் அறிவிக்கப்படும். இதற்கென விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விசேட செய்தி அறிக்கைகளும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கருத்து அறியும் நிகழ்ச்சிகளும் இடையிடையே ஒலி, ஒளி பரப்பாகும். (ஐ)

## அ.தி.மு.க கூட்டணிக்கு 30 இடங்கள் கிடைக்கும்

### வாழப்பாடி நம்பிக்கை

சென்னை, மார்ச் 2

தமிழ் நாட்டில் அ. தி. மு. க. கூட்டணி 30 இடங்களில் வெற்றியீட்டும் என்றுதமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.



இம் முறை 8 ஆவது தடவையாக நான் மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டுள்ளேன். 1967 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை நடந்த மக்களவைத் தேர்தல்களில் தமிழகத்தில் இரு முறை மட்டுமே ஆளும் கட்சி வெற்றி பெற்றுள்ளது. ஏனைய தடவைகளில் எதிர்க்கட்சிகளே வெற்றியீட்டின. இம் முறைத் தேர்தலில் 'அலை' என்று எதுவும் கிடையாது. அதிகளவில் கள்ள வாக்குகள் போடப்பட்டுள்ளன. அதையும் மீறி அ. தி. மு. க. கூட்டணி 30 இடங்களில் வெற்றிபெறும்.

மாநிலத்தில் 38 தொகுதிகளில் காங்கிரஸ் கட்டுப் பணத்தை இழக்கும். தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவைக்குத் தேர்தல் வரும். அத் தேர்தலிலும் எமது கூட்டணி தொடரும் — என்று அவர் தெரிவித்தார்.

(ஐ-10)

## திருடிய பணத்தில் கோயில் கட்டிய திருடன்

### சென்னையில் கைது

சென்னை. மார்ச் 2

சென்னையில் பல்வேறு இடங்களிலும் பூட்டை உடைத்து திருடியதாக உத்திரமேரூர் அருகேயுள்ள காட்டான் குளம் பகுதியைச் சேர்ந்த மன்னார் (வயது 29) என்ற நபரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

திருடிய பணத்தைக் கொண்டு இவர் காட்டான் குளம் கிராமத்தில் கங்கை அம்மன் என்ற கோயிலைக் கட்டி கும்பாபிஷேகம் நடத்தியது விசாரணையின் போது தெரியவந்ததாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

தேனாம்பேட்டை, பூவிருந்த வல்லி, வளசரவாக்கம் போன்ற பகுதிகளில் 18 வீடுகளில் மன்னார் திருடியுள்ளார். வாலாஜாபாத் ராஜவீதியில் உள்ள அடகுக்கடையில் இவர் அடகு வைத்த நகைகளும், பல்வேறு இடங்களில் புதைத்து வைத்திருந்த நகைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

(ஐ-10)

இந்தியச் செய்திகள்

## 36 மணி நேரத்தினுள் முழு முடிவும் தெரியும்

புதுடில்லி, மார்ச் 2

வாக்குகளை எண்ணுவதில் புதுமையான, நவீன வழிமுறைகள் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் வாக்கு எண்ணத் தொடங்கியதில் இருந்து 36 மணி நேரத்தினுள் எல்லா முடிவுகளும் வெளியாகி விடும் என்று தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

வாக்குகளை எண்ணும் ஒவ்வொரு நிலையத்துக்கும் பார்வையாளர் ஒருவர் அனுப்பப்பட்டிருப்பார். ஒவ்வொரு சுற்று முடிவுகளும் வெளியானதும் அவர்கள் தேர்தல் ஆணையகத்துக்கு தகவல்களை அனுப்பி வைப்பர். பதற்றம் நிலவும் பகுதிகளில் தடங்கல் இன்றி நடைபெற கூடுதல் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# பி. ஜே.பிக்கு 244 இடங்கள்?

# மத்தியில் மீண்டும் கூட்டரசு

### வாக்களிப்புக்கு பிந்திய கருத்துக் கணிப்பு

புதுடில்லி, மார்ச் 2

இந்தியாவில் மீண்டும் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத தொங்கு நாடாளுமன்றமே அமையும்.

பாரதிய ஜனதாக் கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் 244 இடங்களைக் கைப்பற்றி தனியொரு பெரிய அரசியல் கட்சியாக உருவாகும். இது கடந்த தேர்தலில் அக்கட்சி பெற்றதை விட 59 இடங்கள் அதிகமாகும்

தூர தர்ஷனும், ஆகாச வாணியும்—இணைந்து நடத்திய வாக்கெடுப்புக்குப் பிந்திய கருத்துக் கணிப்புக்களின் முடிவில் இந்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி 140 இடங்களைப் பெற்று இரண்டாவது இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளும்.

ஆளும் ஐக்கிய முன்னணி முன்னரை விட 53 இடங்களை இழந்து 118 இடங்களையே பெறும்.

சுயேச்சைகளும் ஏனையோரும் 38 இடங்களைப் பெறக்கூடும். புதிய அரசு அமைக்கப்படுவதில் முக்கிய பங்கு வகிக்கும்.

நாடு முழுவதும் 120 மக்களவைத் தொகுதிகளில் ஆயிரத்து 450 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பின் பின்னர் 26ஆயிரம் பேரிடம் கேட்டு அறிந்த கருத்துக்களைக் கொண்டு இந்த முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

(ஐ)

## சோனியாவைக் கொல்லச் சதி?

## பொறியியலாளரின் மரணத்தில் மர்மம்?

புதுடில்லி, மார்ச் 2



சோனியா காந்தியைக் கொலை செய்யத் திட்டமிட்டதாகக் கூறப்படும் பொறியியலாளர் ஒருவரின் மர்ம மரணம் தொடர்பாக விசாரணைநடத்துமாறு இந்திய மத்திய அரசு மத்திய புலனாய்வுப் பிரிவைக் கோரவுள்ளது.

கடந்த மாதம் 18 ஆம்திகதி பிளாஸ்பூர் மாவட்டத்தில் ரயில் பாதை ஒன்றின் அருகே பிரஸ்தாப பொறியியலாளர் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

அவரது வீட்டில் சோதனை நடத்தியபோது சோனியா காந்தியின் மத்தியப் பிரதேச சுற்றுப்பயணம் தொடர்பான குறிப்பு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

திருமதி சோனியா காந்தி கடந்த 25ஆம் திகதி பிளாஸ்பூரிலும் வேறு மூன்று இடங்களிலும் தேர்தல் பிரசாரங்களில் பங்குபற்றினார். (ஐ)

## சூத்திரதாரி கைதானார்

கோவை ஆர். எஸ். புரம் கார்க் குண்டு வெடிப்பில் தொடர்புடைய தீவிரவாதி யார் என்று தெரியவந்துள்ளது. குட்டி (22) என்ற அவர், ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் கடிகாரம் பழுது பார்க்கும் கடை நடத்தி வந்தார். தீவிரவாத நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்த இவருக்கு ஆர். எஸ். புரத்தில் கார்க் குண்டுகளைக் கொண்டு சேர்த்தல் மற்றும் இயக்கி வைத்தல் போன்ற அனைத்துப் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## ஜெயின்கமிஷன் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு இந்திய அரசு மறுப்பு

புதுடில்லி, மார்ச் 2

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்தவென நியமிக்கப்பட்ட ஜெயின் கமிஷனின் பதவிக்காலம் நீடிக்கப்படமாட்டாது.

இதனை நீடிப்பதற்கு இந்திய மத்திய அரசு மறுத்துவிட்டது.

ஜெயின் கமிஷனின் பதவிக் காலம் நேற்று முன்தினம்சனியுடன் முடிவடைந்தது.

அதேவேளை இறுதி அறிக்கை தொடர்பான அலுவலகப் பணிகளை மேற்கொள்ள ஜெயின் கமிஷன் மேலும் இருவாரகால அவகாசம் கேட்டுள்ளதாகவும் —

ஆனால் ஒரு வாரகால அவகாசமே வழங்கப்படுமென்று இந்திய உள்துறை அரசியல் வட்டாரங்கள் தெரிவித்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கமிஷனுக்கு இருமாத அவகாசம் வழங்கப்படும் என முன்னர் செய்தி வெளியாகி இருந்தது. (ஐ-7)

## 3 கி.மீ. நீளமான 80 தொன் கேக்!

புதுடில்லி, மார்ச் 2

இந்தியாவின் சுதந்திரத்தின் பொன் விழாவைக் குறித்துமிகப் பிரமாண்டமான அளவிலான கேக் ஒன்று கண்காட்சிக்காக அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கேக்கின் நிறை 80 தொன்கள் ஆகும். நீளம் 3 கிலோ மீற்றர்கள். இந்தக்கேக் பொதுமக்களின் பார்வைக்காக இம் மாதம் புதுடில்லியில் காட்சிக்கு வைக்கப்படும் என்று பீ. ரி. ஐ. தெரிவித்தது.

உலகிலேயே மிகப் பெரியது என வர்ணிக்கப்படும் இந்தக் கேக் இந்தியாவின் பல பகுதிகளையும் சேர்ந்த சமையல் கலைஞர்களைக் கொண்ட இந்திய சமையல் கலை அமைப்பால் தயாரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொலைத்தொடர்பு சேவை

**ஜெயா அழகு மாடம்**

இல. 149, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

T. P. No: 021- 2405 (சி/2994)



## வைத்தியசாலை இடமாற்றம்
## MODERN HOSPITAL
(நர்சிங்ஹோம் - ஆறுகால்மடம்)

கடந்த 15 வருடகாலமாய் இரவு பகலாய்ப் பணியாற்றிவரும் மேற்படி வைத்தியசாலை, கடந்த 5 மாதங்களாக தபாற்பெட்டி சந்தி, திருநெல்வேலியில் இயங்கியது. அங்கு இடவசதி போதாமையால் மீண்டும் தனது சேவையை ஆறுகால்மடம் வைத்திய சாலையில் வைத்திய நிபுணர் வசதி, வார்ட் வசதி, ஆய்வுகூட வசதிகளுடன் **28 - 02 - 98** தொடக்கம் ஆரம்பித்துள்ளது என்பதனை அனைவர்க்கும் அறியத் தருகிறோம்.

**டாக்டர் ஆ- பேரின்பநாதன்**
(பணிப்பாளருக்காக)

767, மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம், யாழ்ப்பாணம். (53753)


## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



வையகத்தில்:
**20—12—1925**

வானுலகில்:
**31—01—1998**

அமரர் மயில்வாகனம் அருணாசலம்
(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

திங்களொன்று சென்றதுவே
எங்கள் துயர் தீரவில்லையே
ஏங்குகின்றோம் உம் நினைவாலே
எங்கு சென்றாயோ அப்பாவே?


இன்று திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது சபிண்டீகரண கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''கணேசா வாசம்''
மீசாலை கிழக்கு, மீசாலை (சி/3006)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
**05 — 09 — 1922**



மறைவு:
**22 — 02 — 1996**

அமரர்
# தம்பிமுத்து இராசையா
திதி — **02 — 03 — 1998**

அன்புத் தந்தையே!
ஈராண்டு ஓடினவே; ஆனாலும் உங்கள் நினைவுகள் எம்மனதை விட்டு அகலவில்லை! பாசமும், பரிவும் காட்டி எம்மை வளர்த்து வாழவைத்த தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி- தங்கரத்தினம்,
பிள்ளைகள், மருமக்கள், மைத்துனி,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

வேம்பன் வீதி (ஓஸ்கா),
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (53735)

## இரணைமடுவில் பஸ் விபத்தில் மூவர் காயம்

வவுனியா, மார்ச் 2

கடந்த 24 ஆம் திகதி பயணிகள் பஸ் ஒன்று இரணைமடுப் பகுதியில் சென்று கொண்டிருந்த போது விபத்துக்குள்ளானது. இச்சம்பவத்தில் மூன்று பேர் படுகாயமடைந்து வைத்திய சாலைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்,

ஒருவர் காலில் கடுங்காயம் ஏற்பட்டு புதுக்குடியிருப்பு மருத்துவமனையிலும், இருவர் அக்கராயன் மருத்துவ மனையிலும் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ-9)

## வைரவிழா போட்டிகள்

வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வைர விழாவை ஒட்டி நடத்தப் பட்டு வரும் போட்டிகளில் அடுத்த சுற்றுப் போட்டிகள் இம்மாத நடுப்பகுதியில் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நான்கு பேர் கொண்ட கரப்பந்தாட்டம் (ஓவர் கேம்), ஆறு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெற், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளே நடத்தப்படவுள்ளன.

இதேவேளை உதைபந்தாட்ட வீரர்களுக்கான இரண்டரை நாள் பயிற்சி முகாம் ஒன்றையும் கழகம் நடத்தவுள்ளது. 25 பேருக்கான இப்பயிற்சி முகாமை துறை சார்ந்த பயிற்சியாளர்கள் நடத்துவர். இதில் பங்குபற்றுவதற்கான **விண்ணப்** பப் படிவங்களை கழக அலுவலகத்தில் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## முன்னோடிப் பரீட்சை பரிசளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம், கடந்த ஆண்டிறுதியில் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய ஜி. சீ. ஈ (சா/த) தமிழ்மொழி முன்னோடிப் பரீட்சையில் முதன்மை பெற்றோருக்குப் பரிசில் வழங்கும் விழா எதிர் வரும் 7-ம்திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை முதன்மைவிருந்தினராகவும், யாழ். கல்வித்திணைக்களம் வலயம் 2 இன் கல்விப்பணிப் பாளர் சிவராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இவ் விழாவிலே மரபுவழித் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றிய தமிழறிஞர் மூவர் கௌரவிக்கப் படுவார்கள். (ஐ)

## மரத்தால் விழுந்து காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

இளநீர் பிடுங்க தென்னை மரத்தில் ஏறிய இளைஞர் ஒருவர் சுமார் 25 அடி உயரத்தில் இருந்து தவறி விழுந்து காயமடைந்தார்.

கோப்பாய் தெற்கில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஏபிரகாம் பிரதீபன் (வயது 18) என்ற இளைஞனே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் இடுப்பின் கீழ்ப்பகுதி முழுவதும் இயங்காத நிலையில், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)


**NEW SCIENCE COLLEGE**
குருநாதர் லேன் — யாழ்ப்பாணம்

PHYSICS
Mr. சம்பந்தன்

★ இலத்திரனியல் ★
ஆரம்பம்: 02 – 03 – 98 MON. 4-00
MON. WED. 4.00 – 5.30

[53757]



**NEW SCIENCE ACADEMY**
NALLUR

மீட்டல் வகுப்புக்கள்
கணக்கீடு — திரு. பாலவாசன்
MON., TUES, THURS, FRI. 6-30—8-00

ஆரம்பம்: 02 – 03 – 98 திங்கள்

குறிப்பு:
A/L — **97** பரீட்சைக்குத் தோற்றிய மாணவருக்கான விசேட வகுப்புக்கள்.

(53756)


## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை
## அறிவித்தல்

### 1998 ஆம் ஆண்டு துவிச்சக்கர வண்டி உரிமம்

1998 ஆம் ஆண்டுக்குரிய துவிச்சக்கர வண்டி இலக்கத்தகடுகள் விநியோகிக்கப்படுகின்றன.

(1) பச்சிலைப்பள்ளி பிரதேசசபை தலைமை அலுவலகம், கண்டி வீதி, பளை.
(2) பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உப அலுவலகம் முகமாலை. (இத்தாவில்)

ஆகிய இடங்களில் அலுவலக நேரத்தில், இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**31 - 03 - 1998** ஆம் திகதிக்கு முன்னதாக இலக்கத்தகடுகளைப் பெற்று சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை

(சி-3008)

# TENDER NOTICE

## MINISTRY OF HOUSING AND URBAN DEVELOPMENT
### DEPARTMENT OF BUILDINGS

1. Tender Board of Department of Buildings. will receive sealed tenders for Construction of Library Block ( Balance work ) Stage II-phase 1 University of Jaffna, Thirunalvely and receiving will be closed at 10.00 A. M. on **25 - 03 - 98**.

2. Tenders should be submitted on the forms available from Chief Engineer (Jaffna), Department of Buildings, No. 46, Somasundaram Lane, Jaffna upto 3. 30 P. M. on **13 - 03 - 98** on payment of non refundable tender fee of One Thousand (Rs 1000. 00) only. Belated callers will be charged additionally, a late fee of Rupees Three Hundred (Rs. 300. 00) only, for each day of delay, prior to issue of bidding documents.

3. Tenders will be opened immediately after the closing, at Contract Branch, Department of Buildings, Sethsiripaya, Battaramulla. Tenderers or their authorised representatives are requested to be present at the opening of tenders.

4. Tender forms will be issued only to Contractors registered as Building Construction Contractors under the scheme of National Registration and Grading of Construction Contractors developed by Institute for Construction Training and Development ( ICTAD ) for Grade M 6 and above haying membership of the National Construction Contractors Association of Sri Lanka (NCCASL).

5. Sealed tenders may be despached either by registered post or hand delivered to the Chairman, Department Tender Board, Department of Buildings, "Sethsiripaya Sir Jayawardenapura, Kotte, Battaramulla to receive before closing time.

6. Tender documents may be inspected free of charge, and any further details could be obtained from Chief Engineer (Jaffna), Department of Buildings, No 46, Somasundaram Lane, Jaffna

T. M. W. Gunasekara
Director of Buildings
Department of Buildings
"Sethsiripaya"
Sri Jayawardanapura,
Kotte,
Battaramulla.

(53720)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் கல்வி நிறுவனங்கள் மீது விரைவில் கட்டுப்பாடு விதிக்கப்படும்

## ஜனாதிபதியின் பணிப்பில் ஏற்பாடு

கொழும்பு. மார்ச் 2

தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் கணனிப் பயிற்சி நிலையங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்து தேசிய கல்வி ஆணைக்குழு உத்தேச நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனியார் கல்வி நிறுவனங்களினதும், கணனிப் பயிற்சி நிலையங்களினது செயற்பாடு குறித்தும் அவற்றின் நடவடிக்கைகள் குறித்தும் உடனடியாக ஆய்வு நடத்த வேண்டுமெனப் பணித்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்படும் பாடங்கள் குறித்தும், ஆசிரியர்களின் கல்வித் தகைமைகள் குறித்தும் உரிய தரங்கள் நிர்ணயிக்கப்படவில்லையென்று ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. வேலை தேடிவருபவர்களுக்கு வேலை வழங்கும் நோக்கோடு தனியார் கல்வி நிறுவனங்களை நடத்தும் ஆசிரியர்கள் கற்பித்தல் தொடர்பான போதியபயிற்சிகளைப் பெற்றிருக்கவில்லையென்றும் தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களும் கல்வி போதிக்கும் பாடங்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட கல்வித்தகைமைகளைப் பெற்றிருக்கவில்லையென்றும் கல்வி நிறுவனங்களில் போதியளவு ஒழுங்கும் கண்டிப்பும் கடைப்பிடிக்கப்படாததால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள் என்றும் தேசிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி மாணவர்களிடமிருந்து அளவுக்கதிகமான கட்டணம் அறவிடப்படுகின்றதெனவும் வழக்கில் இல்லாதகணனிப்பாடநெறிகளே சிலகணனிப் பயிற்சி நிலையங்களில் கற்பிக்கப்படுகின்றன எனவும் நவீன கணனிப் பயிற்சிகள் அறிமுகமாகியுள்ள இந்த வேளையில் இத்தகைய பயிற்சியால் எதுவித பலனும் ஏற்படப்போவதில்லை எனவும் தேசிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்களும்கணனிப் பயிற்சி நிலையங்களும் இது வரை கல்வி அமைச்சில் பதிவு செய்து கொள்ளவில்லை. இதனால் இவற்றின் மீது சரியான மேற்பார்வையை மேற்கொள்ள முடியவில்லை என்றும் ஆணைக்குழு மேலும் குற்றஞ்சாட்டியுள்ளது.

நாடு முழுவதும் உள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் கணனிப் பயிற்சி நிலையங்கள் பற்றிய தகவல்களும், ஆசிரியர்கள் பற்றிய விவரங்களும் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் திரட்டப்பட விருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ–7)

# ஏற்புத்தடை ஊசி மருந்து வந்து சேரவில்லை

யாழ். சுகாதாரத்திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியத்திற்கு கடந்த ஒரு மாத காலமாக ஏற்புத் தடுப்பு ஊசி மருந்து கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவில்லை.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் இவ்வருட முதலாம்கந்தாயத்திற்கான மருந்து வகைகள் அண்மையில் கொண்டு வரப்பட்ட போதிலும் அதில் ஏற்புத் தடுப்பு ஊசி மருந்துவரவில்லை என்று சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கொழும்பிலுள்ள சுகாதார திணைக்களத்தின் மத்திய மருந்துக் களஞ்சியத்திலும் ஏற்பு தடுப்பு ஊசி மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் அதனாலேயே இங்கு அவற்றை அனுப்பி வைப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் மற்றொரு தகவல் தெரிவித்தது. ஏற்பு ஊசி மருந்துக்கு நிலவும் தட்டுப்பாட்டினால் நாய்க்கடிக்கு ஆளானவர்கள் உட்பட பல நோயாளர்கள் உரிய நேரத்தில் அதனை ஏற்றிக்கொள்ள முடியாதுசிரமப்படுகின்றனர்.

இதேவேளை இந்த ஏற்புத் தடுப்பு ஊசி மருந்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பாதுகாக்கப்பட வேண்டியிருப்பதால் தனியார் வைத்தியசாலைகளிலும் அதனைப் பெற முடியாதிருக்கின்றது. (ஐ-135)

# தேடப்பட்டு வந்த டக்ளஸ் பீரிஸ் நாடு திரும்பியதாகத் தகவல்

கொழும்பு, மார்ச் 2

தென்பகுதியில் இடம்பெற்ற ஜே. வி. பி. கலவரங்களின் போது சித்திரவதை முகாம்களில் பல இளைஞர்களையும், யுவதிகளையும் படுகொலை செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவரும், நாட்டைவிட்டுத் தப்பி ஓடி சுவிற்ஸர்லாந்து நாட்டில் தங்கி இருந்தவருமான முன்னாள் மூத்த பொலீஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ் அண்மையில் நாடு திரும்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் மீது சாட்டப்பட்ட பல்வேறு குற்றங்களுக்காக பொலீஸாரால் தேடப்பட்டு வந்தார். டக்ளஸ் பீரிஸை கைது செய்யுமாறு நீதிமன்றங்களால் பல பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. வெளி நாடு தப்பிச் சென்றஇவரைக்கைது செய்ய சர்வதேசப் பொலீஸாரின் உதவியும் நாடப்பட்டது.

''இவரைக் கைதுசெய்ய சர்வதேச ரீதியில் முயற்சிகள் நடைபெறுகின்றன. மாற்றுப் பெயருடனேயே அவர் ஸ்ரீலங்கா வந்திருக்கலாம்'' என மூத்தபொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டக்ளஸ் பீரிஸுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த பல வழக்குகளில் ஒரு வழக்கில் இவரைக் குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம் 2 லட்சம் ரூபா அபராதம் விதித்திருந்தது. அதையடுத்து மாற்றுப் பெயரில் டக்ளஸ் பீரிஸ் தப்பி வெளிநாடு சென்றார்.

1994 இல் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் போது இடம்பெற்ற மோசடிகள் மற்றும் 'பட்டலந்த' வதை முகாம் தொடர்பான விசேட ஜனாதிபதி ஆணைக் குழுக்களிலும் டக்ளஸ் [illegible]. (இ- 10)

# நோயாளர்களுக்கான அறிவிப்பு ஒலிபெருக்கியில்

## யாழ். ஆஸ்பத்திரியில் அமுல்

யாழ். போதனா வைத்திய சாலையில் நோயாளர்களின் நலன் கருதி மேலும் புதிய நடைமுறைகள் அமுல் செய்யப்படவுள்ளன.

கிளினிக்குகளுக்கும், வெளிநோயாளர் பிரிவுக்கும் வரும் நோயாளர்களுக்கும் வார்ட்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கும், அவர்கள் கவனிக்கவேண்டிய விடயங்கள் தொடர்பான அறிவுரைகள் இனி ஒலிபெருக்கி சாதனங்கள் மூலம் வழங்கப்படும்.

கொழும்பு சுகாதார அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஒலிபெருக்கி சாதனம் இதற்கெனப் பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்காக வெளிநோயாளர் பிரிவு, கிளினிக்பிரிவுகள் வார்ட்டுகளில் ஒலிபெருக்கிப் பெட்டிகள்பொருத்தப்படவுள்ளன. (இ–15)

# 'பீஸ்கோப்ஸ்' பிரதிநிதிகள் 6 ஆம் திகதி வெளியேறுவர்

மட்டக்களப்பு, மார்ச் 2

இலங்கையில் கடந்த 35 வருடங்களாக சமூக அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் சர்வதேச தொண்டர் நிறுவனமான ''பீஸ் கோப்ஸ்'' அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் அனைவரும் எதிர்வரும் 6 ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறத்தீர்மானித்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இலங்கையின் தற்போதைய பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டுதற்போது சேவையிலுள்ள 25 உத்தியோகத்தர்களையும், 48 தொண்டர்களையும் எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்பு அமெரிக்கா திரும்புமாறு 'பீஸ்கோப்ஸ்' தலைமையகம் ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே.

இலங்கையில் பரவலாக இடம்பெற்று வரும் குண்டுத் தாக்குதல்களே இந்த அமைப்பினர் உடனடியாக அமெரிக்கா திரும்புவதற்குக் காரணமெனக் கூறப்பட்டது.

---

சாவகச்சேரி

## அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

### மாசி மக இலட்சார்ச்சனை விழா

அன்புடையீர்!

எதிர்வரும் **02 - 03 - 98** திங்கட்கிழமை முதல் காலை, மாலை அன்னை துர்க்காதேவிக்கு விசேட பஞ்சவிம்சதி கலசாபிஷேமும், இலட்சார்ச்சனையும் நடைபெற்று பத்தாம் நாள் **11 – 03 – 98** புதன் கிழமை காலை **(108)** அஸ்டோத்திர கலசாபிஷேகம் மாசிமகத்தன்று நடைபெற்று இலட்சார்ச்சனை பூர்த்தியடையும்.

அடியார்கள் அனைவரும் பத்து நாள்களும் கலந்து அன்னையின் திருவருளைப் பெறுக!

சுபம்.

P. மகாகணபதி சர்மா
தர்மகர்த்தா

சாவகச்சேரி. (53738)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 04 — 1913

மறைவு: 31 — 01 — 1998

**அமரர் முத்தையா நடராஜா**

(முன்னாள் யாழ். ப. நோ. கூ. ச. காசாளர்)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அந்திரான் ஒழுங்கை,
நவாலி தெற்கு. (53680)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 02 — 03 — 1923

மறைவு: 01 — 02 — 1998

**அமரர் சின்னக்குட்டி பொன்னையா**

(இளைப்பாறிய ஆசிரியர், கிழவி தோட்ட ஆலய தர்மகர்த்தா)

அன்பின் மணி விளக்கே!
பேருயர்த் தெய்வ தொண்டனே
தந்தையாய், தாயாய், தமயராகி நின்று
எமை வளர்த்த எம் ஐயாவே!
பிதிர் ஆற்றும் மைந்தரும் மற்றோரும்
வெளி நாட்டில் கதறியழ
எங்குதான் சென்றனையோ?
அடுத்திங்கு பிறப்பொன்று நேர்ந்தால்
நாம் உங்கள் பிள்ளைகளாய் - மீண்டும்
பிறக்க வரம் வேண்டுமையா!

எம்மையெல்லாம் அன்புடன் வழி நடத்தி உறுதுணையாய் இருந்த அன்புத் தெய்வம் மறைந்த 31 ஆம் நாள் வீட்டுக் கிருத்திக வைபவம் 02 – 03 – 98 இன்று நடைபெற இருப்பதால் நண்பர்கள், அன்பர்கள், உறவினர்கள் அனைவரையும் கிரியையிலும், விசேடமாக மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கிழவி தோட்டம்,
கரவெட்டி. (53742)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறோயிலர் இறைச்சிக் கோழி சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். அருள் ஆச்சிரமம், இல. 5, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [53748]

கிறசர்கள், லிஸ்டர் எஞ்சின்கள், D.C ஜெனரேற்றர், ஒரு B.M.C. லொறி(½இரும்பு பொடி) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 312, கே. கே எஸ். றோட், யாழ்ப்பாணம். [53703]

### எரு விற்பனைக்கு

எமது சங்கத்தில் எரு விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் 05–03–98 ஆம் திகதிக்குமுன் எருவைப்பார்வையிட்டு விலை விவரங்களைச் சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி [சி/2990]

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் நடந்ததை அறிய ஆவலாக உள்ள உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் நீங்கள் அனுப்பவேண்டிய நூல் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறுமாதங்கள், ரூபா–50. [53647]

### தவறிவிட்டது

சி. பிரதீபன் ஆகிய எனது விசேட அடையாள அட்டையும், சிறு தொகைப் பணமும் சிவன்கோயிலுக்கும் தட்டாதெருவுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 5, ஐயனார் கோயில் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். [53750]

## களஞ்சியக் காப்பாளர் நியமனம்

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 15 வருட காலத்துக்கு மேலாக நிரப்பப்படாதிருந்த பொதுக் களஞ்சியக் காப்பாளர் பதவி தற்போது நிரப்பப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் கொழும்பு மருத்துவப் பொருள்கள் விநியோகப்பிரிவில் பயிற்சிபெற்றுக் கடமையாற்றிய களஞ்சியக் காப்பாளர்யாழ்.ஆஸ்பத்திரிபொதுக் களஞ்சியக் காப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை இக்கடமையை எழுதுவினைஞர் பதவியிலுள்ளவர்களே செய்து வந்தனர். (ஐ-15)

## மீன்தூள் விற்பனைக்கு

எமது சங்கத்தில் பழுதடைந்த மீன்தூள் விற்பனைக்குண்டு. இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் எமது களஞ்சியத்தில் மீன்தூளைப் பார்வையிட்டு 05 - 03 – 98 நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்,

**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி–2989)

## ரஷ்யாவில் உயர்கல்வி

சர்வதேச அங்கீகாரமுடைய பல்கலைக்கழகங்களில்
மருத்துவம், பொறியியல் மற்றும் ஏனைய துறைகளிலும் அனுமதி பெற்றுத்தரப்படும்.

**98/99** விரிவுரைகள் ஒகஸ்ட் **1998** இல் தொடங்கும்.
அனுமதி பெற்றுத் தருவதற்கான கட்டணம் எதுவுமில்லை.

Dr. க. சிவனடியான்
நவாலி தெற்கு, மானிப்பாய்.

(53754)

## மங்களபதி வைத்தியசாலை

★ மலேரியாக் காய்ச்சல் ★ சர்மநோய்கள்
★ அல்சர் ★ மூலநோய்.
★ இரத்த அழுத்தம் ★ பீனிசம்

மற்றும்
அலர்ஜி வியாதிகட்கும் நவீன சித்த, ஆயுர்வேத, காந்த சிகிச்சை பெறலாம்.

41/5, அரச வீதி,
(பண்டாரக்குளம் பிள்ளையார் கோயிலடி)
நல்லூர். (53710)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 14 — 04 — 1929

உதிர்வு: 02 — 02 — 1996

அமரர்

### க. தாமோதரம்பிள்ளை

(நெடுந்தீவு கிழக்கு, -12- நெடுந்தீவு)

திதி: 02- 03- 1998

துணையாக நின்று துணிவு தந்து வழிகாட்டி
நினையாத வேளையில் நீங்கள் பிரிந்திடினும்
அணையாத தீபமாய் ஆகிநிதம் எம்நெஞ்சில்
நிலையாக நிற்கின்ற நேசமிகு ஐயாவே!

மனைவி, மக்கள்,
பெறாமக்கள், மருமக்கள்,
சகோதரர், மைத்துனி,
பேரப்பிள்ளைகள்.

20, பீ. ஏ. தம்பி லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (53725)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15 — 11 — 1915

உதிர்வு: 12 — 03 — 1997

திருமதி

### சுப்பிரமணியம் நாகம்மா

(கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை)

திதி: 02-03-1998


அன்பின் திருவுருவாய், பண்பின் இலக்கணமாய், பாசத்தின் இருப்பிடமாய், எம் குடும்ப ஒளி விளக்காய்த் திகழ்ந்த எம் ஆருயிர்த் தெய்வமே! எமக்கு வாழ்வில் வழிகாட்டி வைத்து விட்டு, எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுச்சென்றாயே! ஆண்டு ஒன்று சென்றாலும், உன் நினைவால் மனம் நொந்து வாழ்கின்றோம். உன் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

பொற்பதி றோட்,
கோண்டாவில் கிழக்கு.

(53675)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 03 — 1942

மறைவு: 13 — 03 — 1997

### டேவிற் சுப்பிரமணியம் கிருபாகரன்

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து ஓராண்டு - சென்றதுவோ?
நம்ப முடியவில்லையே!

நீங்கள் வாழ்ந்த மலர்வனமாம் குமரகோட்டம்
நீங்கள் இல்லாது பொலிவிழந்து போனதுவே!
காலமெல்லாம் களிப்புற்று வாழ்வோம்
என்று கனவு கண்டோம் ஐயா!

எங்கள் வீட்டின் தாரகையே!
மின்னாமல், முழங்காமல் மேகம் கறுத்ததுவே
எங்கள் விடிவெள்ளி மறைந்ததுவே.

நீங்கள் மறையவில்லை! ஐயா!
எங்கள் உள்ளக் கமலத்தில்
பூத்திருக்கும் புதுமலராய் - எங்கள்
உயிர் உள்ளவரை
பூஜிக்கும் தெய்வம் நீங்கள் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரை வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனையாள் லீலா,
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குமரகோட்டம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (53635)

சர்வம் சிவமயம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தெய்வேந்திரம் கனகபூரணம்

தோற்றம்: **05—11—1950**

மறைவு: **13—03—1997**

திதி: பூர்வபக்க புண்ணிய பஞ்சமி

எமது குலவிளக்காய் விளங்கிய அம்மா! நீங்கள் மறைந்து ஓராண்டு ஆகியும் உங்கள் நினைவு நாம் இறைவனடி எய்தும் வரை நெஞ்சை விட்டகலாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

கணவர், பிள்ளைகள்,
மைத்துனர், மைத்துனி,
மருமக்கள், பெறாமக்கள்

'தர்சினி' ஸ்ரோர்ஸ்,
ஆடியபாதம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (சி/2981)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## குடாநாட்டு கப்பற் சேவை

குடாநாட்டுக்கான பயணிகள் சேவையை ஆரம்பிப்பதில் மீண்டும் தடங்கல் நிலை தோன்றியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

குடாநாட்டுக்கான பயணிகள் கப்பற் சேவை ஏற்கனவே, முடக்கமுதையாக விழுந்து கிடக்கின்றது. கடந்த வருடம் ஜூன் மாதத்தின் பின்னர் திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான சேவை அனேகமாக முற்றாக ஸ்தம்பித்துப் போய்விட்டது.

காங்கேசன் — திருமலை கப்பற் சேவைக்கு மாற்றீடாகவும் ஒரு வகையில் மேலதிகமாகவுமென ஆரம்பிக்கப்பட்ட மன்னார் — காங்கேசன் துறை சேவை இரண்டு மூன்று பயணங்களுடன் நின்று விட்டது.

கப்பற் சேவைகள் ஸ்தம்பித்துப் போன்தால் மிகப் பெரிய அளவில் பாதிப்புறுவோர் குடாநாட்டில் இருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்து சென்று இப்போது அங்கும், வவுனியாவிலும் தங்கியுள்ளவர்களே. இவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் குடாநாட்டுக்குத் திரும்பி வந்து தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர விரும்புவோர் ஆவர்.

கடந்த முப்பது மாதங்களில், இவர்களில் மிகப் பலரும், ஏழு எட்டுத் தடவைகளுக்கு மேல் மாறி மாறி இடம் பெயர்ந்து, இன்னற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களைத் தமது சொந்த இடங்களுக்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதே. 1996 ஒக்ரோபரில் வன்னியிலிருந்து அகதிகளை வவுனியா வருமாறு அழைப்பு விடுத்த அரசு, பதினெட்டு மாதங்களாகியும் இன்னும் குடாநாட்டுக்குக் கொண்டு வந்து சேர்க்கவில்லை.

போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு நாளாந்தம் கோடிக் கணக்கில் செலவிடும் அரசினால்—

போரில் விடுதலைப் புலிகளை வெல்லும் முயற்சியில் பல உத்திகளை வகுத்துச் செயற்படும் அரசினால்—

தமிழ்ப் பகுதிகளில் தேர்தல்களை நடத்தி— திணித்து— ஜனநாயகத்தை மீள்விப்பதாகக் காட்டிக்கொள்வதில் அக்கறை காட்டும் அரசினால்—

வெளிநாடுகளின் உதவியுடன் யாழ்ப்பாணத்தை புனர் நிர்மாணம் செய்வதில் அக்கறை உள்ளதாகக் காட்டிக் கொள்ளும் அரசினால் —

தமிழ் அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு கப்பற் சேவையை நடத்த முடியாதிருப்பது ஏனோ?

தமிழர்கள் தானே; ஆறுதலாக செய்வோம்; என்ற அணுகு முறையா? அல்லது இயலாமையா?

இதில் அரசுக்கு அக்கறை இருந்தால் அது கப்பற் சேவையாக செயலுருவம் பெறவேண்டும். அந்தரித்துக் கொண்டிருக்கும் அகதிகளுக்கு ஒருநாள், ஒரு யுகமாக வேதனையுடன் கழிகிறது என்பதனை அரசினால் ஏன் உணர்ந்து கொள்ள முடியவில்லை?

# பல்கலைக்கழக அனுமதி முறையும் அதன் பாதக, சாதக விளைவுகளும்

பல்கலைக்கழக அனுமதிமுறை சம்பந்தமான சரியான விளக்கம் பலருக்கும் இல்லை. அதனால் அதில் உள்ள குறை நிறை மக்களுக்குத் தெரிவதில்லை. பல்கலைக்கழக அனுமதியானது பலர் முயற்சிக்கின்ற போதிலும் ஒரு சிலருக்கே கிட்டுவதாகும். எனவே இது பலரினது கவனத்தையும் ஈர்ப்பதாகும். க. பொ. த. (உ/த) ஒகஸ்ட் 1997 பரீட்சைப் பெறுபேறுகள், பல்கலைக்கழக புதிய மாணவர் அனுமதிப்பட்டியல் ஆகியவை வெளியாகியுள்ள இவ்வேளையில் பல்கலைக் கழக அனுமதி முறையை சுருக்கமாக விளக்குகிறது இக்கட்டுரை.

இக்கட்டுரையை எழுதுவதற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அளித்த விளக்கங்கள் பெரிதும் உதவியுள்ளன.

அ. பஞ்சலிங்கம்
(முன்னாள் கல்லூரி அதிபரும்,
இந்நாள் பல்கலைக்கழகப் பகுதிநேர விரிவுரையாளரும்)

க. பொ. த. (உயர்தர) ஒகஸ்ட் 1997 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இம்முறையும் பரீட்சார்த்திகளின் தராதர அடைவுகளுடன் (Gradings) அவர்களின் மாவட்ட நிலை (District Rank), தேசிய நிலை (Island Rank) என்பனவும் வெளியிடப்பட்டுள்ளன. இவர்களின் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவோரின் பட்டியல் வெளியாக மேலும் குறைந்தது ஒரு வருடமாவது செல்லும்.

எனவே மாணவர்கள் தமக்குக் கிடைக்கக்கூடிய கற்கை நெறிகள், பீடங்கள் பற்றிய அனுமானங்களை முன்கூட்டியே ஓரளவு பெறுவதற்கு இக்கட்டுரை உதவும், இதன் மூலம் ஏமாற்றங்களை முன்கூட்டியே தவிர்த்து, வேண்டுமாயின் மீளவும் பரீட்சைக்குத்தோற்றி விரும்பிய பாடநெறியினை பெற முற்படலாம்.

கடந்த பல ஆண்டுகளாகத் தேசிய ரீதியில் பல்கலைக்கழக அனுமதிக்குப் பின்பற்றப்படும் முறையினைப் பார்ப்போம்.

கலை தவிர்ந்த ஒவ்வொரு கற்கை நெறிக்கும் 40 வீதமான மாணவர்கள் (பரீட்சார்த்திகள்) தேசிய ரீதியில் திறமை அடிப்படையில் (Merit Quota) தெரிவு செய்யப்படுகின்றனர்.

1997ஆம் ஆண்டு ஒகஸ்ட்டில் நடைபெற்ற க. பொ. த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மருத்துவத்துறைக்கு அகில இலங்கையிலும் 800 மாணவர்களை 5 பல்கலைக்கழகங்கள் அனுமதிப்பதாக ஒரு வகைக்கு எடுத்துக் கொள்வோம்.

பல்கலைக்கழகங்கள் அனுமதிக்கும் (மருத்துவத்துறை) மொத்த மாணவர் — 800.

திறமை அடிப்படையில்—

$40\% - \left(800 \times \frac{40}{100} = 320\right)$

320 மாணவர்கள்.

மாவட்ட அடிப்படையில் சனத்தொகை விகிதப்படி— 55% மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். அது:

$\left(800 \times \frac{55}{100} = 440\right)$ —

அதாவது 440 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

யாழ்ப்பாண மாவட்டச் சனத்தொகை இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 5% ஆகும்.

எனவே மாவட்ட அடிப்படையில் யாழ். மாவட்டத்திற்குரிய அனுமதி $\left(440 \times \frac{5}{100} = 22\right)$ — 22 மாணவர்கள் ஆவர்.

அல்லது அனுமதியின் $55 \times \frac{5}{100} = 2 \cdot 8\%$ ஆகும்

மேலும் 5% (100%—40%—55% = 5%) எஞ்சியுள்ளது.

இந்த $5\% - \left(800 \times \frac{5}{100}\ 40\right)$

40 மாணவர்களுக்கான இடங்களாகும்.

இவை 13 பின்தங்கிய மாவட்டங்களுக்கு அந்த மாவட்டங்களின் சனத்தொகை அடிப்படையில் பகிரப்படும். யாழ்.மாவட்டமும் ஒரு பின்தங்கிய பிரதேசமாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று மற்றைய கற்கை நெறிகளுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். (கலைத்துறை அனுமதியினை இறுதியில் பார்ப்போம்)

இங்கே முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயம் உண்டு. யாழ். மாவட்டத்தில் க. பொ. த, (சா/த) வரை கற்ற பலர் வேறு மாவட்டங்களில் குறிப்பாக கொழும்பு, வவுனியா போன்ற மாவட்டங்களில் க. பொ, த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இவர்கள் யாழ். மாவட்ட ஒதுக்கீடான மொத்த அனுமதியின்2·8%ற்குள் அடங்குவதாகக் கணிக்கப்படுவர்.

ஆனால் தற்போது வெளியிடப்பட்டிருக்கும்பெறுபேற்றுப்பட்டியலில் யாழ். மாவட்டத்தில் அமைந்த பரீட்சை நிலையங்களில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை மாத்திரம் கருத்திற் கொண்டு பரீட்சார்த்திகளின் மாவட்ட நிலை கணிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்போது அறிவிக்கப்பட்டுள்ள மாணவர்களின் மாவட்டநிலை சிறிது பின்னடையவே செய்யும் என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். தேசிய நிலையில் மாற்றமேதும் ஏற்படாதென்பது குறிப்பிடத்தக்கது.

### மருத்துவபீடத்திற்கு 800மாணவர்கள்

இலங்கையில் ஆறு மருத்துவபீடங்கள் உள்ளன. இந்த ஆறு பீடங்களுக்கும் ஏறத்தாழ 800 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். இந்த 800 என்ற எண்ணிக்கை எவ்வாறு பெறப்பட்டது? மருத்துவ மாணவர்களை அனுமதிக்கும் பீடாதிபதிகளும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் இணைந்து, ஒவ்வொரு பீடத்திற்குரிய பௌதிக, ஆளணி, ஆய்வுகூட, போதனாவைத்தியசாலை வசதிகள் அங்குள்ள ஆளணியினர் சேவைபோன்றமேலும் பலஅம்சங்களைக் கவனித்தே ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்திற்கும் ஒதுக்கப்படும் மாணவர் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகின்றது.

இவ்வாறே பிறபீடங்களுக்கும் மாணவர் தொகையினை நிர்ணயிப்பார்கள். மருத்துவ மாணவர் அனுமதியில் கல்வி அமைச்சரும் நேரடியாகக் கவனம் செலுத்துவது அவதானிக்கத்தக்கது.

ஆறுமருத்துவபீடங்களுக்குமாக 800 மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டுமாயின் அவர்கள் முன்கூறப்பட்டுள்ள அடிப்படையில் அதாவது 40 % திறமை; 55 % மாவட்டம்; 5 % பின்தங்கிய மாவட்டம் என்றவாறு தெரிவு செய்யப்படுவர்.

இவ்வாறு தெரிவு செய்யும் பொழுது மொழி, இனம் ஆகியவை கவனத்திற்கு எடுக்கப்படவேண்டிய தேவை இருக்காது.

இவ்வனுமதியின் போது கூடுமானவரை மாணவர் விரும்பும் பல்கலைக்கழகத்தினை ஒதுக்க மானிய ஆணைக்குழு முயற்சிக்கும். ஆனால் இது எப்பொழுதும் சாத்தியமல்ல.

திறமை அடிப்படையில் முதல் 10 வீதமானோருக்கு அவர்கள் விரும்பும் பல்கலைக்கழகம் ஒதுக்கப்படும். அதன்பின் மாணவரின் மாவட்டம், மொத்தப்புள்ளியின் நிலை, நிரந்தரவதிவிடம் போன்ற இன்னோரன்ன காரணிகள் கருத்திற்கொள்ளப்பட்டு பல்கலைக்கழகம் ஒதுக்கப்படும்.

### யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு 100 மாணவர்களை ஒதுக்குவதாக முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டிருந்தால் அந்த எண்ணிக்கை மாணவர்கள் இங்கு பதிவு செய்து கொள்ளும்படி அறிவுறுத்தப்படுவர். இதேபோலப் பிற மருத்துவ பீடங்களுக்கும் மாணவர்கள் ஒதுக்கப்படுவார்கள். யாழ். மருத்துவ பீடத்திற்கு ஒதுக்கப்பட்ட மாணவர்களில் தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்களும் அடங்குவர். பாதுகாப்பு, போக்குவரத்துப் போன்ற காரணங்களைக்காட்டி சிங்கள,முஸ்லிம் மாணவர்களும் ஒரு சில தமிழ் மாணவர்களும் யாழ். மருத்துவபீடத்திற்குப் பதிவு மேற்கொள்ள மாட்டார்கள்.

யாழ். மருத்துவ பீடத்தில் இவர்களின் இடங்கள் வெற்றிடமாக இருக்கும். அதே வேளையில் இவர்கள் வேறு மருத்துவ பீடங்களுக்கு பகிர்ந்து அனுமதிக்கப்படுவதனால் அப்பீடங்களில் ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறுதான் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் பிற துறைகளிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

### வெற்றிடங்களை நிரப்பல்

உதாரணமாக எடுத்துக் கொண்ட யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட அனுமதியினையே தொடர்ந்தும் கருத்திற் கொண்டால் 100 மாணவர்களில் 66 மாணவர்கள் பதிவு செய்தனர் எனக் கொள்வோம். மிகுதியாக 34 வெற்றிடங்கள் இருக்கும். அதன் பின்னர் 34 மாணவர்களை மேலும் அனுமதிக்கக் கூடியதாக யாழ். மருத்துவ பீட அனுமதிக்கான வெட்டுப்புள்ளி குறைக்கப்படும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் மாணவர்களில் முன்னரைப் போலவே பல இனத்தவர்களும் அடங்குவர். இவர்களில் பலரும் இங்கு வரச்சம்மதிக்கமாட்டார்கள். எனவே வெற்றிடங்கள் பூரணமாக நிரப்பப்படாத நிலை மீண்டும் தோன்றும்.

### கலைத்துறை அனுமதி

கலைத்துறை அனுமதியினைப் பொறுத்தவரை 100 வீதம் திறமை அடிப்படையிலேயே முழு இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எனினும் இந்த நடைமுறையிலும் ஒரு நிபந்தனை சேர்க்கப்பட்டுள்ளது. 1990/91ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கலைத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையினை விட அதன்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## தவக்கால சிந்தனை

(6 ஆம் நாள்)

விரைவான போக்கிலே சென்று கொண்டிருக்கும் உலகில், நிழல் போல நம்முடைய நற்செயல்களும், தீச் செயல்களும் நம்மைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. எம்மோடு கூட வருபவை இவைகள் மட்டும்தான்.

ஆனால் மனிதன் தனது நிலைக்கு ஒத்தவர்களுடன்தான் உறவு நிலையை வளர்த்துக் கொள்கின்றான். ஏழ்மையில் இருப்போருக்கு உதவுவோர் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே. ஆனால் இறைவனுக்குத் தாராளமாகக் கொடுப்பதிலும் புகழ்தேடுவதிலும் செல்வந்த நிலையில் உள்ளவர்கள் முந்திக் கொள்கின்றார்கள்.

கிறிஸ்து கூறுகின்றார்: ''மிகச் சிறியராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்'' (மத. 25:40).

மனிதன் முகத்தைப் பார்க்கிறான்; இறைவன் உள்ளத்தைப் பார்க்கிறான். இறைஆட்சியின் நீதி இருக்கையில் மனிதனில் இறைவனைக் காணவே இறை அழைப்பு எமக்கு விடுக்கப்படுகின்றது.

இது குறித்தும் சிந்திக்கவும் செயற்படவும் விளைவோமோ?

— அருள்

## உதய வாக்கு

எவனொருவன் யோசித்து பின் மிதமான வார்த்தைகளைப் பேசுகிறானோ அவனே பெரியோர்களின் மதிப்பைப் பெறுகிறான்

— மகாவீரர்.

## நாளை

மாசி 19

செவ்வாய்க்கிழமை

திதி: பஞ்சமி

பிற்பகல் 12.31 வரை

நட்சத்திரம்: பரணி

பின்இரவு: 2.01 வரை.

ஷஷ்டி விரதம்

சுபநேரம்: 10.57 – 12.27

ராகு காலம்: 3.27 – 4.57

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகர நிலத்தடி நீர் வேகமாக மாசடைகிறது!

## ஆய்வுசெய்ய உதவி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ். மாநகரசபைப் பகுதியில் நிலத்துக்கு கீழான நீர்மண்டலம் மாசடைவதால் நகரில் உள்ள கிணறுகளில் சுத்தமான குடிதண்ணீர் பெறமுடியாத அபாய நிலை தோன்றியுள்ளது. ஆகவே இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

யாழ். வருகை தந்த ஜேர்மன் நாட்டு அதிகாரிகளிடம் யாழ். மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

ஜேர்மன் பொருளாதார நடவடிக்கைக்கான அமைச்சு பிரதிநிதியான வி. லோய் கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரக பிரதித் தூதுவர் டாக்டர் டி. வி. போத்தமர் ஆகியோர் யாழ். வந்திருந்தனர்.

யாழ். செயலகத்தில் கடந்த வெள்ளியன்று நடந்த கலந்துரையாடலில் இவர்கள் கலந்து கொண்ட சமயம் அங்கு வைத்து மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் விடுத்த கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். நகரப் பகுதியில் 1990 ஆம் ஆண்டு இருந்த நிலைக்கு குடிதண்ணீர் விநியோகத்தை மீளக் கொண்டுவர ஜேர்மன் முனைந்துள்ளது.

அதே நேரம் — யாழ். மாநகரசபைப் பகுதிக்குள் உள்ள கிணறுகள் மாசடைவதால் சுத்தமான நீர் பெறுவதில் நெருக்கடி ஏற்படும் அபாயம் உள்ளது.

ஆகவேநிலத்துக்குக் கீழான நீர்மண்டலத்தை ஆய்வு செய்ய ஜேர்மன் முன்வர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் ஜேர்மன் மேற்கொண்டுள்ள திட்டங்கள் குறித்து ஆராயவே இக்குழுவினர் யாழ். வருகை தந்தனர்.

(ஐ-3)

# ஜப்பானிய தூதுக்குழு இன்று யாழ். வருகிறது

கொழும்பு, மார்ச் 2

யாழ். குடாநாட்டின் நிலைமையினை ஆராய்ந்து அபிவிருத்திக்கான நிதி உதவிகளை வழங்குவதற்காக ஜப்பான் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் தலைமையில் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இக்குழுவினைத் தொடர்ந்து ஜெனீவாவில் இருந்து வருகை தந்துள்ள பீற்றர் மேஜர் தலைமையில் யு. என். எச். சீ. ஆர். குழு ஒன்று 4 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது. யு. என், எச். சீ. ஆர். கடந்த மூன்று வருடங்களாக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவி வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ். வரும் குழுவினர் அரசாங்க அதிபர் மற்றும் உள்ளூராட்சி சபைகளில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களையும் சந்தித்து உரையாடவுள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க தூதரகக் குழு கொழும்பு திரும்பியுள்ளது.

ஜப்பான் யு. என். எச். சீ. ஆர் குழுக்களைத் தொடர்ந்து மேலும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுக்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிய வருகிறது.

(ஐ-10)

# மருந்து ஏற்றுவதற்கு ஊசி வாங்கிச் செல்லும் நோயாளர்

தென்மராட்சி, மார்ச் 2

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பிரதி சனிக்கிழமைகளில் நடத்தப்படும் தாய் சேய் சிகிச்சை நிலைய கிளினிக்குக்குச் செல்வோர் மருந்து ஏற்றும் ஊசி வாங்கிச்செல்ல வேண்டியுள்ளது. இங்கு மருந்து ஏற்றும் ஊசி இல்லாததால் வெளியில் வாங்கி வருமாறு அங்குள்ள உத்தியோகத்தர்களால் அறிவுறுத்தப்படுகிறது.

மாதத்தில் இருதடவைகள் கிளினிக்குக்குச் செல்வோர் ஒவ்வொரு தடவையும் தனியார் மருந்துக் கடைகளில் 45 ரூபாவுக்கு ஊசியினை வாங்கிச் செல்வதாகவும் ஊசி கொண்டு செல்லாதவர்களை அடுத்த கிளினிக்குக்கு ஊசியுடன் வருமாறு திருப்பி அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக் கிளினிக்கில் ஏற்புத் தடை மருந்து இல்லாததால் கர்ப்பிணித்தாய்மார்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது.

கடந்த பல மாதங்களாக கிளினிக்குக்குச் செல்வோருக்கு 'திரிபோஷா' சத்துணவு வழங்கப்படுவதில்லையெனவும்தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# மலத்தியோன் விசிறும் பணி

செம்பியன்பற்று, மார்ச் 2

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள அம்பன், குடத்தனைப் பகுதிகளில் மலத்தியோன் விசிறும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அம்பன் பகுதி மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர் எஸ். சிவரத்தினம் தெரிவித்தார்.

(ஐ-36)

# கோப்பாய் ஆலயச் சூழலில் மிதிவெடிகள் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 2

கோப்பாய் வடக்கு கேணியடி நாகதம்பிரான் வைரவர் கோயில் சூழலில் இருந்த மிதிவெடிகள் மற்றும் கிரனேட்டுக்கள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈ. பி. டி. பி. அமைப்பின் உதவியுடன் 51 ஆவது படையணி பிரிகேடியர் றொக்லூட் தலைமையில் இந்தப்பணி மேற்கொள்ளப்பட்டது.

நூற்றுக்கு மேற்பட்ட மிதிவெடிகள், கிரனேட்டுக்கள் அகற்றப்பட்டதையடுத்து எதிர்வரும் 4 ஆம் திகதி விசேட பூசை ஆராதனைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ வி. எம். பரமசாமிக் குருக்கள் தெரிவித்தார்.

(ஐ-3)

# உழவுஇயந்திரம் தெளிகருவி வாடகைக்கு

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்திற்கு நான்கு சில்லு உழவு இயந்திரம், மருந்து தெளிகருவி ஆகியவை வந்துள்ளன. இவற்றை வாடகைக்குப் பெற்று பயன்படுத்த விரும்பும் விவசாயிகள் தத்தமது பகுதி விவசாய சம்மேளனங்கள் ஊடாக மீசாலை வடக்கு புத்தூர்ச் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

# கிளாலிக் கரையோரம் ஷெல்கள் வீழ்ந்தன!

தென்மராட்சி, மார்ச் 2

கிளாலி கடற்கரையை அண்டிய பகுதிகளில் கடந்த சனிக்கிழமை பகல் தொடக்கம் ஞாயிறு அதிகாலை வரை ஐம்பக்கு மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

அவை பூநகரிப் பகுதியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களாக இருக்கலாமென நம்பப்படுகிறது.

இதேவேளை சாவகச்சேரி அல்லாரை முகாமிலிருந்து பூநகரியை நோக்கி சனிக்கிழமை காலை தொடக்கம் தொடர்ச்சியாக ஷெல் வீச்சு நடத்தப்பட்டது.

கிளாலிப் பகுதியில் ஷெல்கள் வீழ்வதால் இப்பகுதி மக்கள் மத்தியில் பதற்றம் காணப்பட்டது. (ஐ-117)

# பரிசாரகர் பயிற்சி நெறி ஆஸ்பத்திரியில் பூர்த்தி

## மார்ச் 15 இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ். போதனாவைத்திய சாலையில் கடந்த மூன்று மாத காலமாக நடைபெற்று வந்த பரிசாரகர் பயிற்சி நெறி நேற்று முன்தினம் முடிவடைந்தது.

யாழ். போதனாவைத்திய சாலையில் இருந்து 30 சிற்றூழியர்களும், வடக்கு-கிழக்கு மாகாணசபை, யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவு வைத்திய சாலைகளைச் சேர்ந்த 30 மாணவர்களுமாக மொத்தம் 60 பேர் இப் பயிற்சி நெறியினைப் பெற்றுவந்தனர்.

பயிற்சி முடிவுற்றதை அடுத்து இவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-15-139)

# பொலீஸ்மா அதிபர் மரணம்

மட்டக்களப்பு, மார்ச் 2

கிழக்கு மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் நந்த ஜினசேன நேற்று முன்தினம் காலமானார். அவரது அலுவலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

(ஐ-21)

### உலகளாவிய ரீதியில்

# சாதாரண பொருளாகிறது தங்கம்! விலை சரிவு! தொழில் பாதிப்பு!!

ஜோஹனர்ஸ்பேர்க், மார்ச் 2

உலகளாவிய ரீதியில் தங்கத்தின் விலை சரிந்து வருவது குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது. தங்கம் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும், அத்துறை சார்ந்த பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களுக்கும் இது பெரும் அச்சுறுத்தலாக உருவாகி வருகிறது.

தங்கத்தின் விலை தொடர்ந்தும் வீழ்ச்சியடையுமானால் தொழிலைக் கைவிடவேண்டிவரும் என்று தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் உள்ள தங்கச் சுரங்கத் தொழில் நிறுவனங்கள் எச்சரித்துள்ளன. அவ்வாறு தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டால் பலலட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்கநேரிடும்.

தங்கத்தில் உலகம் ஆர்வம் இழந்துவிட்டது. தங்கத்தை செலாவணியாகச் சேமித்து வைத்திருந்த உலக வங்கிகள் பல அவ்வாறு அதனைச் சேமிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு எடுத்துள்ளன.

தங்கம் ஏனைய பொருள்களைப் போன்று சாதாரண பொருள்தான் என்ற நிலைக்கு வங்கிகள் வந்துள்ளன.

இந்த வங்கிகள் அனைத்தையும் சேர்த்து பல நூற்றுக்கணக்கான தொன் தங்கம் உலகில் உள்ளது.

உலக தங்கச் சுரங்கங்களில் 15 ஆண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் தங்கத்தின் மொத்த அளவுக்கு இணையான அளவு தங்கத்தை வங்கிகள் சேமித்து வைத்துள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் தற்போது ஒரு அவுன்ஸ் தங்கம் 300 டொலர்களுக்கும் குறைவானதாகவே உள்ளது.

இந்த விலைமதிப்பில் தங்கத்தை உற்பத்தி செய்ய முடியாத நிலையில் பல சுரங்க நிறுவனங்கள் சேமிப்பை மிச்சப்படுத்துவதற்காக தொழிலாளர்களை பணியில் இருந்து நீக்கி வருகின்றன, தென்னாபிரிக்காவில் இந்நிலை காணப்படுகிறது.

(ஐ-8)

# "தினமலர்" அலுவலகம் நேற்றுத் தாக்கப்பட்டது!

## உபகரணங்கள் சேதம்

மதுரை, மார்ச் 2

மதுரையில் உள்ள ''தினமலர்'' பத்திரிகை அலுவலகம் நேற்றுக் காலை ஆயுதபாணிகளின் தாக்குதலுக்கு இலக்காகிச் சேதமடைந்தது.

50 பேர் கொண்ட ஆயுதக் கும்பல் ஒன்று ஆயுதங்களாலும், வெடி குண்டுகளாலும் அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தியது. அங்கிருந்த கணனிகள், அச்சுஇயந்திரங்கள் மற்றும் தளபாடங்களை நாசமாக்கியதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

மு. க. அழகிரிக்கு எதிராக செய்திகள் வெளியானதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக வெளியான செய்திகளை அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக முதலமைச்சர் தலையிட்டு விசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று மதுரை பத்திரிகையாளர் சங்கம் கோரியுள்ளது.

இதேவேளை முதலமைச்சர் மு. கருணாநிதி இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை நகரப்பகுதியின் தேவைகள் குறித்து வலியுறுத்து

## புளொட் உறுப்பினர் அமைச்சரை சந்தித்தனர்

கொழும்பு, மார்ச் 2

பருத்தித்துறை நகரப் பகுதியில் அழிக்கப்பட்ட நவீன சந்தையை மீண்டும் கட்டி எழுப்பவும்—

நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையம் ஒன்றை அமைக்கவும்—

புதிய நூலகம் ஒன்றை அமைக்கவும் — நிதி வழங்கி உதவவேண்டும்.

மேற்கண்டவாறு பருத்தித்துறை நகர சபையின் தலைவராகப் பதவியேற்கவிருக்கும் வி. விஜயரட்ணம் (செல்லக்கிளி மாஸ்டர்), துணைத் தலைவராகப் பதவியேற்கவிருக்கும் வின்சன் கென்னடி ஆகியோர் உள்ளூராட்சி சபைகள், மாகாணசபைகள் அமைச்சர் அலவி மௌலானாவிடம் கோரியுள்ளனர்.

அமைச்சருடன் நடந்த சந்திப்பில் புளொட் அமைப்பின் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் போதிய அளவு நிதி மற்றும் வளங்கள் அற்ற நிலையில சபை நடவடிக்கைகளை பயன் தரும் வகையில் முன்னெடுத்துச் செல்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி இந்தச் சந்திப்பில் எடுத்துக் கூறப்பட்டது.

இச் சந்திப்பில் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கைகள் வருமாறு:–

★ ஏற்கனவே வழங்கஉறுதியளிக்கப்பட்டுள்ள நிதியை விட மேலதிகமாக கணிசமானஅளவு நிதி வழங்கப்பட வேண்டும்.

★ குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள வாகனங்களும், குப்பைகளை அகற்றக்கூடிய வாகனங்களும் வழங்கப்படவேண்டும்.

★ மீனவர்களது வாழ்க் தலைவர் த. சித்தார்த்தனும் கலந்துகொண்டார்.

கைத் தரத்தை மேம்படுத்தக் கூடிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் போதியளவு உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

★ நகரின் பிரதான பகுதிகளில் பொது வசதிகள், அமைப்புக்கள் நிர்மாணிக்க உதவவேண்டும்.

இக் கோரிக்கைகளை கவனத்தில் கொண்ட அமைச்சர் மிக விரிவான கால அவகாசத்தில் அனைத்தையும் நடைமுறைப்படுத்த ஆவன செய்வதாக உறுதி அளித்தார்.

சிறு கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கக்கூடிய கடனுதவிகளை சபையூடாகவும் மேற்கொள்ளவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

(இ-3)

# தென்மராட்சியில் 25 சமுர்த்தி நியமனங்கள்

தென்மராட்சி, மார்ச் 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 25 சமுர்த்தித் திட்ட ஊக்குவிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 25 பேருக்கான நியமனக் கடிதங்கள் யாழ், செயலகத்தினால் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நியமனக்கடிதங்கள் பிரதேச செயலகத்தினால் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் திட்டமிடல் பிரிவினர் தெரிவித்தனர்.

(ஐ-117)

## சுகாதார நிலையம்

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் குளமன்கால். முருங்கையப்புலம் ஆகிய கிராமங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை வலிகாமம் வடக்கு பிரதேச சபை மேற்கொண்டு வருகிறது.

# மாநில சுயாட்சி ஒன்றுக்காக பொதுமுன்னணிஅமைத்து போராடுவதற்கு நாம் தயார்

## ரெலோ அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

''வடக்கு—கிழக்கு மாகாணத்திலே மத்திய அரசு மீளப்பெற முடியாத—

தெளிவாக வரையறுக்கப்பட்ட—

அதிகாரங்களைக்கொண்ட மாநில சுயாட்சி ஒன்றுக்காக ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பொது முன்னணி அமைத்துப் போராட நாம் தயார்''

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் செயலாளர்நாயகத்துக்கு அனுப்பி உள்ள கடிதத்தில் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளது.

தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்து பொது அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று ஈ.பி.ஆர். எல். எவ். அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிறேமச்சந்திரன் விடுத்த கோரிக்கைக்கு பதில் அளித்து அனுப்பியுள்ள கடிதத்தில் ரெலோ மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது கட்சியின் 3 ஆவது தேசிய மாநாட்டில் 5 கட்சிகளின் கூட்டிலிருந்து வெளியேறுவதற்கு தீர்மானம் எடுத்த பின்னர், கூடிய மத்திய குழு ஏகமனதாக ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் சேர்ந்த ஒரு பொது முன்னணியின சாத்தியம் பற்றி ஆராய எமக்குப் பணித்துள்ளது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஸ்தாபித்து, ஐக்கியப்பட்ட மதச் சார்பற்ற இலங்கைக்குள், இணைந்த வடக்குக்கிழக்கில் தெளிவாக வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஒரு மாநில சுயாட்சியை ஸ்தாபிப்பதற்கும், யுத்தத்தினால் அழிந்த எம் மண்ணை புனர்நிர்மாணிக்கவும் ஒரு பொது முன்னணி ஒன்றின் அவசியம் இந்தக் காலகட்டத்தினது வரலாற்று ரீதியானதும், யதார்த்த ரீதியானதுமான ஒரு தேவை என்பதை நாம் உணர்ந்திருக்கின்றோம்.

கடந்தகாலங்களில் நீண்டகாலமாக நடைபெற்றஇலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக தமிழ் கட்சிகளிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பற்பல திசைகளில் குறிக்கோள் இல்லாமல்இழுபட்டுச் சென்றதை தாங்கள் அறிவீர்கள்.

நமது போராட்டத்தின் முக்கிய அம்சமான எமது மக்களின் பாரம்பரிய மரபுவழித் தாயகமான இணைந்த வடக்கு – கிழக்கைப்பற்றிக் கூடிய அவதானம் செலுத்தாமல் அதிகாரங்களிலேயே கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்று தங்கள் கட்சி வலியுறுத்தியதையும் நாம் தங்களின் மேலான கவனத்திற்கு இச்சந்தர்ப்பத்தில் கொண்டுவர விரும்புகின்றோம்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியோ ஆரம்பத்தில்தென் கிழக்கு என்ற பிராந்தியம் ஒன்றின் குறைப்பிரசவத்திற்கு மருத்துவிச்சியாக இருந்து பின்னர் இணைந்த வடக்கு—கிழக்கு என்பதில் இப்போது கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

புளொட், ஈரோஸ் போன்ற அமைப்புக்கள் இணைந்த வடக்கு—கிழக்கை சிதைத்து தென்கிழக்கை உருவாக்க முனைந்திருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியோ இணைந்த வடக்கு—கிழக்கை சிதைக்கும் தற்போதைய அரசின் தீர்வுப் பொதியில் மறைமுகமான ஒரு சிருஷ்டிகர்த்தாவாக இருக்கின்றது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் மட்டுமே இணைந்த வடக்கு—கிழக்கு எமது மக்களின் மரபுவழித் தாயகத்தின் ஒருமைப் பாட்டினை முன் வைத்து அன்றும் எவருடனும் எந்த இணக்கத்துக்கும முன் வராது உறுதியாக இன்றும் என்றும் இருக்கும்.

ஆகவே தமிழ் கட்சிகள் இணைந்த வடக்கு—கிழக்கு மாகாணத்திலே மத்திய அரசு மீளப் பெறமுடியாத, தெளிவாக வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட மாநில சுயாட்சி ஒன்றுக்காக ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பொது முன்னணி அமைத்து போராட நாம் தயார் என்பதை தெட்டத் தெளிவான வார்த்தைகளால் உறுதியாகக் கூறுகின்றோம்.

இணைந்தவடக்கு—கிழக்கு மாநிலத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்குத்தான் இது தீர்வாக இருக்கும். அம் மக்கள் மத்தியில் இருக்கும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் ஆகியோர் தனித்துவங்கள் பேணப்படுவதும் இந்த இணைந்த வடக்கு—கிழக்கு மாநிலத்தின் நிர்வாக அலகின் ஒரு வரலாற்று நியதியாகவும் இருக்கும் என்பதில் எமக்கு தெளிவான கருத்து உண்டு.

ஆகவே மேற்கண்ட ஒன்றுக்காக ஒரு பொதுவேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு பொது முன்னணி ஒன்றை அமைப்பது சம்பந்தமாக எமது விருப்பத்தையும் தயார் நிலையையும் நாம் இக்கடிதம் மூலம் தங்களுக்கு எடுத்தியம்ப விரும்புகின்றோம்.

இப்படித் தெரிவிக்கிறது.

(இ-...)

## பல்கலைக்...

(ஏழாம் பக்கத் தொடர்)

பின்னர் வரும் ஆண்டுகளில் அம்மாவட்டங்களிலிருந்து கலைத்துறைக்கு அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கை குறையாமலிருக்க வேண்டுமென்பதே அந்த நிபந்தனையாகும். அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை தள வருடமான 1990—91 லும் பார்க்க ஒரு மாவட்டத்தில் குறைவாக இருந்தால் அம்மாவட்டத்திற்கு மேலதிக மாணவர்கள் தெரிவாவர். இத்தள ஆண்டு தற்பொழுது 1993—94 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இக்கட்டுரையில் உதாரணத்திற்கு மட்டும் மருத்துவத்துறையினை எடுத்துக் கொண்டபோதிலும் நடைமுறை (கலைத்துறை தவிர்ந்த) ஏனைய துறைகளுக்கும் பொருத்தமாக அமையும். ★

# துரையப்பா விளையாட்டரங்கு

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாகிவிட்டன. ஆர்வலர்கள் அனைவரும் அரங்கில் பல்வேறு நிகழ்ச்சிகளைக் காண ஆவலாக உள்ளனர்.

இவ்விளையாட்டு அரங்கில் தற்பொழுது நடத்தக்கூடிய நிகழ்ச்சிகளுடன் கிரிக்கட் 400 மீற்றர் ஆகியனவற்றை நடத்துவதற்கு இம்மைதானத்தின் சுற்றளவினைச் சற்று அதிகரித்தாலே போதுமானது என விளையாட்டுத் துறையைச் சார்ந்தவர்கள் கூறுகின்றனர்.

இச்சுற்றளவினை அதிகரிக்க இந்த மைதானத்திற்கும் யுனைட்டற் கிளப்புக்குமிடையிலான ஓடுபாதையினைப் பயன்படுத்தலாம். இவ்வாறு உபயோகிப்பது கடினமானதாகும். இவ்வாறு இல்லாது இப்பாதையினையும் இன்றுள்ள மைதானத்துடன் இணைத்து ஓடு பாதையில் அமைந்துள்ள பகுதியை விளையாட்டு மைதானத்திற்குரியவாறு பேணிக் காக்கலாம்.

பாதையினை மூடிவிடுவதால் பாவனையாளருக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படாது. முனியப்பர் கோயிலை வந்தடைபவர், (யாழ். திறந்த வெளி அரங்கினிற்கும் புல்லுக் குளத்திற்கும் இடையே அமைந்துள்ள) சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியை அடைந்த பின் அதனூடாக மணிக்கூட்டினை அடைந்து அங்கிருந்து யாழ். மத்திய கல்லூரிக்கும், யாழ். திறந்தவெளி அரங்கிற்கும் இடையிலான வீதியூடாக நூல் நிலையத்தினை அடைந்த பின்னர், அங்கிருந்து சுப்பிரமணியம் வீதி, யுனைட்டற் கிளப்புக்கும் இடையிலான வீதியூடாக துரையப்பா விளையாட்டு அரங்கை அடையலாம், இவ்வாறு பிரயாணம் செய்வதால் நபர் ஒருவர் ஆகக்கூடியது 250 மீற்றரே நடக்க வேண்டி ஏற்படும்.

இந்த ஏற்பாட்டைச் செய்தால் துரையப்பா விளையாட்டு அரங்கில் எம்மவரில் பலர் ஆர்வமாகக் கண்டு களிக்கின்ற கிரிக்கட், 400 மீற்றர் ஓட்டப்போட்டி என்பனவற்றை இங்கே நடத்திடலாம்.

மக்களால் விரும்பிப் பார்க்கப்படும் இந்நிகழ்ச்சியை இங்கு நடத்தக்கூடியதாக மைதானத்தினை அமைத்திட புனரமைப்பிற்கு அயராது உழைத்தவர்களை வேண்டுகிறேன்.

க. வி. கந்தவேள்

யாழ்ப்பாணம்.


## ஆத்மார்த்த அஞ்சலி

### கந்தர் கதிராமு

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கந்தர் கதிர்காமு அமரராகிவிட்டார். அன்னார் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் பூந்தோட்டம் அமைத்தலில் முக்கிய பங்கு கொண்ட சரியைத் தொண்டர் ஆவார்.

அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய சேவையில்

மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாகசபை.

(53765)

## பாவனையாளரின் கவனத்துக்கு!

தற்பொழுது கம்பனி விலையில் எல்லாவகையான சிகறட்டுகளும் எல்லா விற்பனையாளரிடமும் பாவனையாளர் பெறலாம்.

| விலைப் பட்டியல் | | பக்கட் | தனி சிகறட் |
|---|---|---|---|
| Bristol | 20s | 80/- | 4/- |
| Gold Leaf | 12s | 54/- | 4/50 |
| Gold Leaf – Light | 20s | 90/- | 4/50 |
| Gold Leaf | 20s | 90/- | 4/50 |
| Benson and Hedges | 20s | 105/- | 5/25 |

Distributors for:

Ceylon Tobacco Co. Ltd.

MURUGAN STORES

388, Hospital Street,

Jaffna.

(53766)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் பிரச்சினை ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 2

வலி – வடக்கில் இடம்பெயர்து 12 அகதி முகாமில் தங்கியுள்ளவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நேற்று கூட்டம் ஒன்று நடைபெற்றது,

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன், ஈ.பி.டி.பி. பிரமுகர்களான கே. நிசாந்தன், எஸ். செல்வராசா, எஸ். சிவகுமார், எஸ். கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இடம்பெயர்ந்த மக்களின் இருப்பிடப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை உட்பட மற்றும் பல பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறப்பட்டது.

சுகாதார அதிகாரிகள், அரச அதிகாரிகள் இடம்பெயர்ந்த மக்களைக் கவனிப்பதில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ், அரச அதிபர், அரசசார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகள் ஊடாகவும், தமது கட்சி ஊடாகவும் இவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதாகவும்—

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற ஜனாதிபதி உட்பட மற்றும் அதிகாரிகளுடன் பேச்சு நடத்திவருவதாகவும் — நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் தெரிவித்தார். (இ-3)

# வடக்கே வந்து மீண்டும் குடியேறுவதா? இல்லையா?

## முஸ்லிம்கள் இம்மாதம் முடிவு செய்வர்

கொழும்பு, மார்ச் 2

வடமாகாண முஸ்லிம்கள் தமது பகுதிகளில் மீளக் குடியேறுவதா? இல்லையா? என்ற தீர்க்கமான முடிவு ஒன்றை விரைவில் எடுக்கவுள்ளனர் என வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் செயலாளர் மௌலவி பி. கபியான் தெரிவித்தார்.

இந்த அமைப்பின் பேராளர் மாநாடு, இம்மாதம் நடைபெறும் போது வடமாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றிய பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

இது குறித்து மௌலவி கபியான் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 1990 ஆம் ஆண்டு வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் ஒரு சில இடங்களில் குடியேறியுள்ள போதும் அது முழுமையாக இடம்பெறவில்லை.

1995 ஆம் ஆண்டு வடமாகாணத்தின் ஒரு சில பகுதிகள் அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பின்னர் இடம்பெற்ற மீள் குடியேற்றப் பிரதேசங்களில் முஸ்லிம்களின் வாழ்விடங்களும் அடங்குகின்றன.

எனவே இக்குடியேற்றத்தில் முஸ்லிம்களையும் வாழச் செய்ய அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். இந்தச் செயற்பாடுகள் வடக்கு முஸ்லிம்கள் மத்தியில் பல தரப்பட்ட அபிப்பிராய பேதங்களை உருவாக்கியது.

தமக்கு முஸ்லிம்களால் வழங்கப்பட்ட ஆணையை உறுதிப்படுத்தும் நோக்கில் மீண்டும் பொறுப்புணர்வோடும் தூரநோக்குடனும் வடக்கு முஸ்லிம்களுக்கான அமைப்பு பல முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. வடமாகாண முஸ்லிம்களின் பிரதிநிதிகளிடம் சாதாரண மக்களிடமும் கலந்துரையாடல்களையும் கருத்தரங்குகளையும் நடத்தி அரிய பல ஆலோசனைகளைப் பெற்றுள்ளது.

அத்தோடு மன்னார், வவுனியா மாவட்டத்திலுள்ள சில பகுதிகளில் குடியேறியுள்ள மக்கள் மத்தியிலும் பல கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் நடத்தி அவர்களின் அபிப்பிராயத்தையும் பெற்றது. மீளக்குடியேற்ற சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள யாழ். நகர், முசலி, நானாட்டான் ஆகிய மக்களின் அபிப்பிராயத்தையும் கேட்டறிந்துள்ளது.

இது தொடர்பாக புத்தளத்தில் எமது அமைப்பின் மத்திய செயற்குழு கடந்த வாரம் கூடி இம்மாதம் நடைபெறவுள்ள பேராளர் மாநாட்டின் தாயக மண்ணில் மீள் குடியேறுவது தொடர்பாக முடிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-10)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அந்த வான் சாரதி அச்சத்துடன் அந்தப் பெண்ணை ஏற்றிச் சென்றார்.

தெகிவளையில் இறங்கி அந்தப் பெண் ஓட்டம்பிடித்தார்.

தற்கொலைக் குண்டுதாரி என பரப்பப்பட்ட வதந்தியால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

மகரகம, கல்கிசை, பொரலஸ்கமுவ, பிரியந்தல ஆகிய பகுதிகளில் இந்தப் பெண் நடமாடுவதாக மக்கள் கூறுகின்றனர்.

இந்த மர்மப் பெண் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்றும்—

பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும்—பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த பெண் தொடர்பாக விசாரணைகள் நடைபெறுவதாகவும்—

மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும்—பொலீஸார் தெரிவித்துள்ளனர். (இ-3-10)


**HARY'S INSTITUTE**

Kondavil East, Kondavil.

**SPOKEN ENGLISH**
With
**GRAMMAR**

Lectured by: **Mr. M.A. Hari**
(B.A. Dip. in Eng.)

புதிய பிரிவு ஆரம்பம்:

● பிரிவு I 07-03-98 **8-00 a.m**
Saturday, Sunday 8-00 a.m — 9-00 a.m

● பிரிவு II 10-03-98 **3-30 p.m**
Tuesday, Thursday 3-30 p.m — 4-30 p.m

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

– Director

(53755)


## கௌரவிப்பு

செம்பியன்பற்று மார்ச் 2

வடமராட்சி கிழக்கில் கலைஞர்களையும், சமூக நலன்விரும்பிகளையும் இனங்கண்டு கௌரவிக்கும் வைபவம் ஒன்று கடந்த சிவராத்திரி தினத்தன்று நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலய முன்றலில் நடைபெற்றது.

கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்விற்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் சி. பசுபதி தலைமைவகித்தார்.

கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வில் முதற்கட்டமாக சில கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

## இடமாற்றம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் க. இராசரட்ணம், மல்லாகம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி முதல் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-15)

## புளொட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்)

தலைவராக வ. விஜயரட்ணமும்(செல்லக்கிளி மாஸ்டர்), உப தலைவராக வின்சன்ட் கென்னடியும் பதவியேற்கவிருக்கிறார்கள்.

ஏனைய சபைகளில் பதவியேற்பவர்கள் தொடர்பான விவரம் வெளியாகவில்லை.

இந்த சபைகளுக்கு தேவையான நிதி மற்றும் வசதிகளை பெற அரசுடன் அக்கட்சி பேச்சு நடத்தி வருகிறது.

அதே நேரம் — ஈ.பி.டி.பி. அமைப்பு கைப்பற்றியுள்ள 10 பிரதேச சபைகளுக்கு மான பதவியேற்பு தொடர்பாக இன்னமும் முடிவாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## துரையப்பா...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று அல்பிரேட் துரையப்பா விளையாட்டரங்கு திறந்து வைக்கப்படுகிறது. விளையாட்டுத் துறையில் ஆர்வம் கொண்டுள்ள யாழ். மக்களுக்கு இன்று ஒரு பொன்னான நாள்.

1983 ஆம் ஆண்டு வரை இந்த விளையாட்டரங்கில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று வந்தன. எனினும் அதன் பின்னர் இடம்பெற்ற சம்பவங்களால் இந்த விளையாட்டரங்கை முழுமையாகவே பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது.

1997 செப்ரெம்பர் மாதம் இந்த விளையாட்டரங்கை மீண்டும் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத் துறையில் ஆர்வம் உள்ள இளைஞர்கள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் யாழ்ப்பாணம் நகர கொமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸை இது தொடர்பாக அணுகி இந்த விளையாட்டரங்கை புனரமைத்து உதவும்படி கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக உடனடியாக செயற்பட்ட பிரிகேடியர் மெண்டிஸ், சில நாள்களுக்குள் மாநகர சபை அதிகாரிகளுடன் துரையப்பா விளையாட்டரங்குக்குச் சென்று நிலைமையை நேரில்ஆராய்ந்தார். இதனை புனரமைப்பதற்கான மதிப்பீட்டுச் செலவை சமர்ப்பிக்கும்படி மாநகர ஆணையாளரை அவர் பணித்தார்.

1997 ஒக்ரோபர் 29 ஆம் திகதி இந்தச் செலவு மதிப்பீடு இளைஞர் விவகார சமுர்த்தி விளையாட்டுத் துறை அமைச்சின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சர் எஸ். பி. திஸநாயக்காவினால் இதன் புனரமைப்பு வேலைகளுக்காக 10லட்சம் ரூபா நவம்பர் இரண்டாம் வாரத்தில் வழங்கப்பட்டது.

புனரமைப்பு வேலைகள் டிசம்பர் முதலாம் வாரம் ஆரம்பிக்கப்பட்டன. விளையாட்டரங்கை புனரமைக்கும் வேலைகள் இரண்டு மாத காலத்துக்குள் முடிவடைய வேண்டும் என்று மாநகர ஆணையாளரிடம் நகரக் கொமாண்டர் கேட்டுக் கொண்டார். இதற்கு இணங்க 1998 ஜனவரி 30ஆம் திகதி இவை பூர்த்தி செய்யப்பட்டன.

விளையாட்டரங்கு திறப்புவிழாவை முன்னிட்டு, ஏற்பாட்டாளர்கள் குழு யாழ்ப்பாணம் — நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கிரிக்கெட் ஆகிய போட்டிகளை நடத்தி வெற்றிபெற்றோருக்கு இன்று சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடாகி உள்ளது.

யாழ். நகர கொமாண்டரின் கோரிக்கையை ஏற்று மாகாண கல்வி இயக்குநர் இந்த சான்றிதழ்கள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

விளையாட்டரங்கு திறப்பு விழாவான இன்று வலைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட கண்காட்சிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாண லீக்கும் பருத்தித்துறை லீக்கும் கலந்துகொள்ளும். இந்த இரு அணிகளுக்கும் தேவையான சீருடைகள் மற்றும் பூட்ஸ்கள் அமைச்சர் திஸநாயக்கவினால் வழங்கப்பட்டுள்ளன.

இன்றைய திறப்புவிழாவில் மாநகர ஆணையாளர் அவரது உத்தியோகத்தர்கள், விளையாட்டு அபிவிருத்திக் குழு ஆகியோர் முக்கிய பங்கு வகிப்பதுடன் நகர கொமாண்டர் சுஸந்த மெண்டிஸ் அவரது உத்தியோகத்தர்கள் ஆகியோர் யாழ். மாநகர ஆணையாளருடன் இணைந்து தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், மேயர், அரச திணைக்களங்களின் தலைவர்கள், பாதுகாப்புப் படையினரின் தலைமை அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோர் இன்றைய திறப்புவிழாவுக்கு அழைக்கப்படுகின்றனர்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

குளத்தைக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாகக் கருதுவதால் அதனைக் காப்பாற்றத் தமது பலம் முழுவதனையும் பயன்படுத்தி வருகின்றனர். எனினும் படையினர் நன்கு திட்டமிடப்பட்ட உபாயங்களைப் பின்பற்றி முன்னேறுகின்றனர். நகரின் எல்லைகளை அவர்கள் சமீபித்துவிட்டனர் என்று யுத்த முனைச் செய்திகள் தெரிவித்தன.

நகரின் எல்லையில் விடுதலைப்புலிகள் அமைத்துள்ள பங்கர்கள் மற்றும் பீரங்கி நிலைகள்மீது விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாங்குளம் கைப்பற்றப்பட்டதும் தெற்கிலிருந்து வடக்குக்கான தரைமார்க்கப் பாதையை திறப்பதற்கான முயற்சி இலகுவாகிவிடும்.

கஜகோபுரத்தில் இருந்து ஓலுமடு வரையிலான 50 கிலோமீற்றர் வீதி தற்சமயம் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனால் விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களுக்கு போய்வருவது தடுக்கப்பட்டுள்ளது, வீதி முழுவதும் படையினரின் கட்டுப்பாட்டின்கீழ்வரும் பட்சத்தில் விடுதலைப் புலிகள் காட்டுக்குள் இருந்து வெளியேற முடியாதவாறு தடுக்கப்பட்டு விடுவார்கள்

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.


**மனஒளி**

— உளநலம் சம்பந்தப்பட்டது —

ஒரு சிறிய இடைவெளியின் பின்......

மது பற்றிய சிந்தனைகளைத் தாங்கி

நான்காவது இதழ் வெளிவந்து விட்டது!

தனிப் பிரதிகளுக்கு

► பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
► உள நோய் சிகிச்சைப் பிரிவு, யாழ். போதனா வைத்தியசாலை.
► சாந்திகம், சுண்டிக்குளி.

(சி/2974)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02 – 03–98 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org